Free Circulation
GERMANY , ENGLAND
வைகாசி. May.2018

# வெற்றிமணி

Vettimaniy

1950 (68)
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck


தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை
Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836

## யேர்மனிக்கே அல்வா கொடுத்த யேர்மனியர்!

## இலக்கு வைக்கப்படும் சம்பந்தனின் “பதவி“!

Dr IN





நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் நம் தமிழ்பெண்!


S.K.Silks & Gold Paraadise
16th ANNIVERSARY
திருமணப் பட்டு சேலைகள், சிறியவர் பெரியவர்களுக்கான பஞ்சாபிகள்,பாட்டி சாறிகள், எதுவானாலும் அதிக தெரிவும், தரமும், மலிவும் கண்டு மகிழ்வும் பயனும் பெற நாடுங்கள்
மாபெரும் ராஜமுத்திரை
Mr.P.Sritharan.Proprietor
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
Germany
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Page.9

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.29




# நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் நம் தமிழ்பெண்கள்!

மாதவி

**பிரஞ்சு மொழியில் கற்று ஆங்கில மொழியில் வாதாடி தமிழ் மொழியில் செய்தி சொன்ன பெண் சஜிகா இரத்தினம்.**

Willem C. Vis International Commercial Arbitration Moot நடத்தும் போட்டியானது உலகிலேயே மிகவும் பிரபலமான சட்டம் பயிலும் மாணவர் களுக்கான போட்டியாக அமைந்துள்ளது. இதனை 1993 ஆண்டு பேராசிரி யர்கள் Cornelius Vis and Eric Bergsten ஆகியோர் உருவாக் கினார்கள். உலகெங்கும் பலபாகங்களிலும் இருந்து போட்டியில் கலந்து கொள்வார்கள். போட்டி ஆங்கிலமொழியில் நடைபெறும்.

University of Geneva பல்கலைக்கழகம் பெருமையுடன் ஒரு சாதனையை அறியத்தருகிறது. the University of Geneva's team ஒரு சரித்திரம் படைத்துள்ளது. உலகளாவிய இப்போட்டி இருபகுதிகளாக இடம் பெற்றன. ஒன்று எழுத்து மற்றையது வாய்மொழி. எமது குழு எழுத்தில் (Written pleadings) முதலிடத்தை பெற்று சரித்திரம் படைத்தது.

வாய் (Oral pleadings) பேச்சில் 64 வது இடத்தை எமது குழு பெற்றுள்ளது. மொத்தம் 366 குழுக்கள் உலகெங்கிலும் இருந்து பங்கு கொண்டன. இந்த வெற்றியை அடைய எமக்கு பயிற்சி தந்த பேராசிரியர்கள் Elena Neidhart மற்றும் Roxanne நன்றி கூறுகின்றோம்.

ஜெனிவாவில் சட்டத்துறையில் (Master in Business Law ) மாஸ்ரர் இறுதியாண்டில் பயிலும் நம் தாய் நாட்டின் பெயர் பொறிக்கும் செல்வி சஜிகா ரத்தினம் முதலிடம் வகிக்கும் ஜெனிவா குழுவில் (the University of Geneva's team) உள்ள ஆறு பெண்களில் ஒருவராக இருப்பது நம்மினத் திற்கு கிடைத்த ஓர் நிமிர்வாகும்.

கடல் கடந்து அகதிகளாக நாம் வந்தாலும் நம் எதிர்காலச் சந்ததியினர் இங்கு அதிதியாக உயர் கல்வியுடன் வலம் வரும் காலம் ஆரம்பமாகிவிட்டது. தாயகத்தின் பெருமையை உலகெங்கும் பரவியிருக்கும் நம் எதிர்காலச் சந்ததியினர் வளர்த்தெடுப்பார்கள் என்பது திண்ணம்.

தமிழ் மக்களின் சொத்து அன்றும் இன்றும் என்றும் கல்வியே அது எந்த அலையடித்தாலும் கலையாது வளரும், வளரவேண்டும்.

பிரஞ்மொழியில் கற்று ஆங்கிலமொழியில் (சர்வதேச போட்டிக்கான) தேர்வு எழுதி, தமிழ் மொழியில் செய்தி சொன்ன சஜிகா இரத்தினம். இவர் தமிழில் சொன்னதை இங்கு தருகின்றோம்.

எழுத்தில் நாம் முதல் இடத்தைப் பெற்றோம். நாம் ஆறுபேரும் இரவு பகலாக சிறப்பானதொரு ஆக்கத்தைப் படைக்கப் பாடுபட்டோம். அப்போது எமக்கு முதல் இடம் கிடைக்கும் என்று எண்ணவில்லை. ஆனால் நம்மால் முடிந்த உச்சத்தை கொடுக்வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். அந்த கடும் உழைப்பு கைமேல் பலன் தந்தது.

வாய் மொழிவாதம் (Oral pleadings) : இதில் நாம் 3ம் இடத்திற்குள் வராதபோதும், எழுத்து போட்டியில் நாம் முதல் இடம் பெற்றமையால் நம்மை கௌரவப்படுத்தும் முகமாக எமது குழுவையும் சிறப்பாக அறிவித்தார்கள்.

வாதாட்டத்தில் முதலாம் இடத்தை இந்தியா கைப்பெற்றும் என நாம் எண்ணியபோதும் ரஷியாவே முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டது.

என்னைப் பற்றி கூறுவது என்றால் நான் Master in Business Law வும் ( இறுதி யாண்டில்) Diploma in Accountings, Finance and Taxation னும் படித்துக்கொண்டு இருக்கிறேன். என்னுடைய விருப்பம் Tax Law வில் ஒரு பிரபல சட்டத்தரணியாக வரவேண்டும் என்பதே. நாமும் அவர் தனது இலக்கை அடையவேண்டும் என வாழ்த்துவோம்.

பி.குறிப்பு: செல்வி.சஜிகா இரத்தினம் அவர்களின் பெற்றோர் தாயகத்தில் குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தற்போது ஜெனிவாவில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கின்றார்கள்.

இன்று தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள், தத்தம் நாடுகளில், கல்வி, கலை, வியாபாரம், அரசியல், என யாவற்றிலும் முன்னணிவகித்து வருவது ஆனந்தமான செய்தியாகும்.

ஆனால் இந்த முன்னேற்றத்தில் நமது முகவரியை தொலைக்காவண்ணம் தாய் மொழி, தமிழ் மொழி அடுத்த சந்ததியினரிடமும் தொடரும் வண்ணம் வழிசெய்ய வேண்டும்.

முதலில் வீட்டு மொழி தமிழாக இருக்கவேண்டும். நமது கலைகளை தமிழ் மொழியில் பயிலவேண்டும். பரதம் என்றால் என்ன, சங்கீதம் என்றால், என்ன தமிழில் எழுதி வைத்து பாடவேண்டும் படிக்கவேண்டும்.

தமிழை ஆங்கிலத்தில் எழுதி படிக்கும் நிலை வரப்படாது. இன்று தேவார திருவாசகங்களையே ஆங்கில மொழியில் தமிழை எழுதி, படிக்கும் நிலை ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்துவிட்டது. இது நல்ல அறிகுறியல்ல.





வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 260



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# இலக்கு வைக்கப்படும் சம்பந்தனின் "பதவி"!

இலங்கையில் இருந்து **பாரதி**



எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இலங்கைப் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இப்போது சிங்களத் தேசிவாதக் கட்சியான பொதுஜன பெரமுனையால் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டு,

கடந்த பெப்ரவரி உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் அமோக வெற்றிபெற்ற பொதுஜன பெரமுனையின் நிகழ்ச்சி நிரலில் அடுத்ததாக உள்ள விவகாரம்தான் சம்பந்தன் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை.

இலங்கை அரசியலிலும் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் விவகாரமாகவும் இதுதான் உள்ளது. மே இரண்டாம் வாரம் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடர் ஆரம்பமாகும் போது, சம்பந்தன்தான் அங்கு பேசு பொருளாக இருப்பார்.

ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நம்பந்தன் நடந்துகொண்ட முறைதான் அவர் மீது ராஜபக்ஷ அணி சீற்றமடைந்திருப்பதற்குப் பிரதான காரணமாகவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 எம்.பி.க்களும் அதன்போது ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தனர். கூட்டமைப்பு இவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பிரதான காரணமாக இருந்தவர் சம்பந்தன். ரணிலை எதிர்த்த கூட்டமைப்பு எம்.பி.க்கள் அனைவரது ஆதரவையும் அவர் பெற்றுக்கொடுத்தார். இதற்காக ரணில் சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார் என்பதும் உண்மை. ஆனால், உலக வரலாற்றில் பிரதமர் ஒருவரைப் பாதுகாப்பதற்காக இந்தளவுக்குத் தீவிரமாகச் செயற்பட்ட எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனைவிட யாரும் இருக்கமாட்டார்கள்.

சம்பந்தன் மீதான ராஜபக்ஷ தரப்பின் சீற்றத்துக்கு இதுதான் பிரதான காரணம். எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு, எதிர்கட்சியாக அவர் செயற்படவில்லை என்ற சீற்றத்தில் அவர்கள் உள்ளனர். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் பிரதமரை வீட்டுக்கு அனுப்புவதில் முன்னின்று செயற்பட வேண்டியவர் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது. அதனை சம்பந்தன் செய்யவில்லை என்பதுதான் பொதுஜன பெரமுனையின் குற்றச்சாட்டு. சம்பந்தன், நல்லாட்சி அரசாங்கத்தின் நம்பிக்கைக்குரியவராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் மாத்திரமே செயற்படுகின்றார். ஆனால், எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளில் அவர் கவனம் செலுத்துவதில்லை என்று அவ்வணி குற்றம் சுமத்தியுள்ளது.
அப்படியானால், எதிர்க்கட்சித் தமைமைப்பதவியை சம்பந்தன் எதற்காக ஏற்றுக்கொண்டார் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இந்த இடத்தில் அமைச்சரும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கொழும்பிலிருந்து துணிச்சலாக் குரல் கொடுத்து வருபவருமான மனோ கணேசன் தெரிவித்திருக்கும் இரண்டு கருத்துக்கள் முக்கியமானவை.

அவர் சொல்கிறார்: "சம்பந்தன், இலங்கை நாட்டின் பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் பதவியை ஏற்றதன் மூலம், தனியொரு நாடு என்ற இலக்கை கைவிட்டு, நாம் ஒரே நாட்டுக்குள் வாழ்வோம் என்ற செய்தியை, சிங்கள தேசத்துக்கு தருகிறார். அதன் முக்கியத்துவத்தை உங்களால் உணர முடியவில்லையா?" என நான் சிங்கள மொழியில், சிங்கள ஊடகங்கள் மூலமாக கடந்த சில நாட்களில் பலமுறை கேட்டுள்ளேன். வழமையாக எனக்கு பதில் கூறும் சிங்கள அரசியல்வாதிகள் எவரும் கூட இதுவரை இதற்கு இன்னமும் பதில் கூறவில்லை."

மனோ கணேசன் சொல்லியிருப்பது தெளிவான ஒரு கருத்து. இதற்கு சிங்களத் தரப்பினரால் பதிலளிக்க முடியவில்லை. பதிலாக, "விகல்ப" என்ற ஊடகம் மட்டுமே, "மனோ கணேசனின் இந்த கருத்தை, ஜனநாயகம் பற்றிய ஒரு துளிகூட அறிவற்ற தென்னிலங்கை சக்திகளால் புரிந்துகொள்ள முடியாது" என கூறியுள்ளது.



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க



ஜே.ஆர்.ஜெயவர்த்தன



அ.அமிர்தலிங்கம்

இலங்கையின் முலாவது எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். 1977 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்க.சு.க. சுதந்திரக் கட்சி 7 ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைந்த போது 18 ஆசனங்களில் வென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். அப்போது பிரதமராகத் தெரிவாகி பின்னர் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன மீண்டும் ஒருமுறை தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வரமுடியாத வகையில் தேர்தல் முறையை மாற்றினார். அவர் கொண்டுவந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படி ஐ.தே.க., ஸ்ரீலங்க.சு.க. ஆகிய இரண்டும்தான் அரசாங்கமாகவே பிரதான எதிர்க்கட்சியாகவே இருக்க முடியும்.

தொடர்ச்சி 04ம் பக்கம்.





# நீ எங்கே இருக்கிறாய்

காற்றில் வரும் வாசம்
மீண்டும் உன்னை தேட சொல்கிறது.

கனவில் உன் வருகை மேலும்
என்னை தூங்க செய்கிறது.

நீ எங்கே இருக்கிறாய்

யாரேனும் தூரத்தில் போனால்
நீ என்று பின்னால் ஓடுகிறேன்.

அது நீ இல்லை என்றதுமே சலிக்காமல்
மறு திசையும் தேடுகிறேன்.

நீ எங்கே இருக்கிறாய்

கூகுலில் முக நூலினில் உன் பெயரை
தேடியும்
உன் முகம் கிடைக்கவேயில்லை..

பழைய முகவரியில் நீ இல்லை என
அனுப்பிய என் கடிதங்களும் என்னிடம்
திரும்பி வருகின்றன.

நீ எங்கே இருக்கிறாய்

பயணம் போகும் போதெல்லாம்
தனி இருக்கையில் அமருகின்றேன்.

பக்கத்தில் நீ உட்க்காருவாய் என
கை பையை வைத்து இடமும்
பிடிக்கிறேன்.

நீ எங்கே இருக்கிறாய்

தொலைத்த இடத்திலேயும் உன்னை
தேடி
களைத்து இழைத்தும் விட்டேன்.

நீ தொலை தூரம் போயிருந்தாலும்
அந்த செய்தியையே அறியாது
இருக்கிறேன்

நீ எங்கே இருக்கிறாய்

எப்போதாவது என்னை பார்க்க
உனக்கு தோண்றினால் ...வா

நீ என்னை எறிந்து விட்டுப் போன
இடத்திலேயே நான் இன்னமும்
இருக்கிறேன்.

**நெடுந்தீவு முகிலன்.**

03ம் பக்கத் தொடர்ச்சி

## இலக்கு வைக்கப்படும் சம்பந்தனின் "பதவி"!



ஆனால், 2015 இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் போது ஐ.தே.க., ஸ்ரீலங்க.சு.க. ஆகிய இரண்டும் இணைந்து ஆட்சியை அமைத்துக்கொண்டன. இதனால், மூன்றாவது அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்பிடம் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி சென்றடைந்தது. இப்போது கூட்டு எதிரணி அல்லது பொதுஜன பெரமுன என அடையாளப்படுத்தப்படும் ராஜபக்ஷ தரப்பினர் 2015 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்க.சு.க. சார்பில் போட்டியிட்டவர்கள். அந்தக் கட்சியின் பிரதிநிதிகளாகவே பாராளுமன்றத்தில் இருப்பதால், எதிர்க்கட்சித் தலைமையைக் கோருவதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன.

அதேவேளையில், சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக வைத்து அழகுபார்ப்பதில் அரசாங்கத்துக்கும் நில நன்மைகள் உள்ளன. எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் ஒருவரை நாம் வைத்திருக்கின்றோம் என காட்டிக்கொள்வதன் மூலம் சர்வதேச அழுத்தங்களைக் குறைக்க முடியும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு.

இனப்பிரச்சினை தீர்வுக்கான வழித்தேடல் என்ற அடிப்படையில்தான் அவர் எதிர்கட்சி தலைவர் பதவி அமர்த்தப்பட்டார். எதிர்கட்சி தலைவர் என்ற அடைப்படையில்தான், அரசியலமைப்பு பேரவையில் இருக்கிறார். இவை சர்வதேச சமூகத்துக்கு பிடித்தமான நடவடிக்கைகள். இந்நிலையில், இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்காக மீண்டும் புது அரசியலமைப்பு பணிகள் ஆரம்பமாக வேண்டும். உண்மையில் புது அரசியலமைப்பு பணிகளை ஆரம்பிக்க முடியாவிட்டால், எதிர்க்கட்சி தலைவர் பதவியினால் பெரும் பயன் விளைய போவதில்லை. சர்வதேச சமூகம்தான் ஆஹா, இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் ஒரு தமிழர் என கூறிக்கொள்ளும்.

இந்த நிலையில்தான், சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக தொடர்ந்தும் இருக்க வேண்டுமா என்ற கேள்வியை மனோ கணேன் எழுப்பியிருக்கின்றார். அவர் சொல்வது இதுதான்:

"பலர் குற்றம் கூறுவதைப்போல், முழு நாட்டுக்கும் எதிர்க்கட்சி தலைவராக செயற்படாவிட்டாலும் கூட, தேசிய நல்லிணக்கம், நல்லெண்ணம் ஆகியவை பாற்பட்ட தனது நல்ல செய்தியை கூட தென்னிலங்கை புரிந்துக்கொள்ளாததைப்பற்றி சம்பந்தன் சிந்தித்து பார்க்க வேண்டும். புதிய அரசியலமைப்பு இல்லையென்றால், இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை. இனப் பிரச்சினைக்கு தீர்வில்லையென்றால், எதிர்க்கட்சி தலைவர் பதவி சும்மா பக்க வாத்தியம்தான். சில அதி தீவிரவாத தமிழ் தரப்புகள் மத்தியில் இருந்து கடும் விமர்சனத்தை எதிர்கொள்ளும் சம்பந்தனின் நியாயமான கோரிக்கைகள்கூட கணக்கில் எடுக்கப்படாவிட்டால், இந்நாடு மீண்டும் பேரழிவை எதிர்கொள்ள நேரிடும்."

புதிய அரசியலமைப்பின் மூலம் இனநெருக்கடிக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால், எதிர்க்கட்சித் தலைமைப் பதவியில் சம்பந்தன் நீடிப்பதில் அர்த்தமல்லை என்பதும், அது அரசாங்கத்தின் காலங்கடத்தும் உபாயத்துக்குத்தான் வழிகோலும் என்பதும்தான் மனோவின் கருத்து. அது யார்த்தமான கருத்துத்தான். தற்போதைய அரசியல் சந்தடிகளில் காணாமல் போயுள்ள புதிய அரசியலமைப்பு பணியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என கூட்டமைப்பு கேட்டிருந்தாலும் கூட, அதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால், தனது நிலைமையை விளக்கி பதவியைத் தூக்கி எறிவது சர்வதேசத்துக்கு தெளிவான ஒரு செய்தியைக் கொடுப்பதாக இருக்கும் என்ற கருத்தில்தான் மனோ இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார் எனக் கருதலாம்.

அதேவேளையில், கூட்டு எதிரணி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றொரு கோணத்தில் உள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய முடியுமா என்ற கேள்வியும் உள்ளது. ரணிலைப் பாதுகாக்க களத்தில் இறங்கியவர் என்ற முறையில் சம்பந்தனைப் பாதுகாக்க ஐ.தே.க. நிச்சயமாக களம் இறங்கும். அதேபோல, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதைத்தான் ஸ்ரீலங்க.சு.க. மைத்திரி அணியும் விரும்பும். அதனால், சம்பந்தனின் பதவிக்கு ஆபத்து வரப்போவதில்லை. சம்பந்தன் பாதுகாக்கப்படுவதன் மூலம், மைத்திரி - ரணில் அரசுக்கு சர்வதேச அரங்கில் உள்ள நற்பெயரும் பாதுகாக்கப்படும். அது சர்வதேச அழுத்தங்களைக் குறைக்கும்.

ஆக, சம்பந்தன் இவ்விடயத்தில் துணிச்சலான - இலங்கை அரசுக்கு அதிர்ச்சியளிக்கூடிய ஒரு முடிவை எடுப்பதன் மூலமாக மட்டுமே தமிழர் பிரச்சினையின் மீதான சர்வதேச கவனத்தைக் குவிக்க முடியும். அதனை அவர் செய்வாரா?




ESTM Jewellery Dortmund

E.S.T

எங்கள் சேவை
திருமண ஆபரணங்கள்
ஓடர் நகைகள்
திருத்த வேலைகள்
தாலிக்குப் பொன்னுருக்குதல்
காது முக்குக்குத்தல்

500€ தங்க நகை வாங்குவோருக்கு
லக்ஷ்மி பென்ரன்
1000€ வாங்குவோருக்கு
1 தங்க நாணயம் வழங்கப்படும்
7 தங்க நாணயம் சேர்த்து வருவோருக்கு
1 பவுண் தங்க நகை
அன்பளிப்பாக வழங்கப்படும்
முடிவு திகதி 31.12.2018

பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்



ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642


Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
Smile price
என்றும் சிறப்பு விலையில்
தரமான சேவைகள்......
.... €
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
e.mail:siva 0108 @hotmail.com
Mob:No: 0179 1484 892
QATAR
Emirates
طيران الخليج
الطيران العماني
OMAN AIR
Allee Str.38-40a
44793 Bochum
Graphic Design Vettimany Ltd

# TAMIL-PARCEL.de

**Next submission date: 31st May 2018**

## இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?

**Tamil-Parcel.de ஐ நாடுங்கள்!**

- ✓ 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
- ✓ பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
- ✓ பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
- ✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)




*Our partners near you:*

*Arnsberg • Bochum • Bonn • Brüggen • Dortmund • Duisburg • Essen • Frankfurt • Heidelberg • Heilbronn • Hornberg • Herne • Hückelhoven • Krefeld • Mannheim • Mönchengladbach • Neuss • Mörfelden-Walldorf • Mühlacker Mühlheim • Solingen • Stuttgart • Wuppertal*

3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்

**BEST PRICE PROMISE**

ஒரு பார்சல் அனுப்பும் கட்டணம் **55€** மட்டுமே

**PARCELS TO COLOMBO ONLY 50€**

FOR MORE INFORMATION, PLEASE CALL:

**0176 56841676**
**0176 24889539**

***www.Tamil-Parcel.de***



# யேர்மனி
## மணிச் செய்திகள்!

தாயகன்

## யேர்மனியில் முதியோரின் எண்ணிக்கை அதிகரிப்பு!



யேர்மனியில் முதியோரின் எண்ணிக்கை கூடிவருவதாகத் தெரியவந்துள்ளது. உழைப்பு, ஒழுங்கான உணவு, நல்ல மருத்துவ வசதிகள், நல்ல சூழல் போன்றநல்ல பல காரணங்களால் முதியோரின் ஆயுட்காலம் கூடிவருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது புதிய நிதி அமைச்சர், புதிய தொழிலமைச்சர், புதிய சமூகசேவைகள் அமைச்சர், புதிய சுகாதார அமைச்சர் எனப் புதிய அமைச்சரவை பொறுப் பேற்ற பின் முதன் முதல் நடவடிக்கையாக ஓய்வூதிய பணத்தை அதிகரித்துள்ளனர். எதிர்வரும் 01-07-2018 முதல் இச்சட்டம் அமுலுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கார் விற்பனை!

உலகில் வாகனங்கள் உற்பத்தி விற்பனையில் முன்னணியில் இருக்கும் நாடு யேர்மனியாகும். 2017ம் ஆண்டு உற்பத்தி செய்து விற்பனையாகிய கார்களைப்பார்த்தால்...

General Motors 30.00.000 -Fiat - 20.70.000 -VW - 6.25.000 -Mercedes - 3.75.000 BMW - 3.71.000 -Ford - 2.57.000

## இலங்கையில் 50 அமைச்சர்கள். ஏன்?
## யேர்மனியில் 14 அமைச்சர்கள் மட்டுமே!

சுமார் இரண்டரைக் கோடி சனத்தொகை கொண்ட இலங்கையில் 50 அமைச்சர்கள். ஆனால் சுமார் 8 கோடி சனத்தொகை கொண்ட யேர்மனியில் 14 அமைச்சர்கள். இதுதான் நிர்வாகக் கட்டமைப்பு. கடந்த மாதம் 14 பேர் கொண்ட புதிய அமைச்சரவை பொறுப்பேற்றது. மொத்தமாக 482 நிறைவேற்று அதிகாரிகளும் 76 திணைக்களங்களும் 244 குழுக்களும் நிர்வாகத்தை வழி நடத்துகிறார்கள்.

## யேர்மனியில் புதுவகைக்காய்ச்சல்!!!

கடந்த பங்குனி மாதத்தில் மட்டும் யேர்மனியில் புதுவகைக் காய்ச்சல் கிருமித்தாக்குதல், வைரஸ் மற்றும் தொற்று நோய்களால் சுமார் 1லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## அகதி

கடந்த 2016ம் ஆண்டிலிருந்து இற்றைவரை கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து மாதாமாதம் சராசரியாக 1.000 பேர் யேர்மனியில் அகதிகளாக வந்திருக்கிறார்கள். இதில் கணிசமான தொகையினர் ஆட்கடத்தல் காரார்களால் கடத்தி வரப்பட்டவர்கள் என்றும் இதனால் ஆட்கடத்தல்காரார்கள் பெருந்தொகைப் பணத்தை சம்பாதித்துள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

## யேர்மனியில் காணி நிலம் வேண்டும்

யேர்மனியில் நிலம் காணி வேண்டிச் சொந்தமாக வீடு கட்டுபவர்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள 16 மாநிலங்களிலும் காணி, நிலம் விலை கூடிய இடங்களை இங்கே காணலாம். அதாவது

1 Quadratmeter பரப்பின் விலையைப் பார்த்தால்...

München - 2.100 € -Stuttgart - 1.183€ - Düsseldorf - 912€ Frankfurt - 803€ -Hamburg - 752 € Berlin - 456€

## நிறை அதிகரிப்பு!



யேர்மனியல் பல்லாயிரம் பேர் நிறை கூடிவருவதால் இந்த நாடு பெரும் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றது. மாறிவரும் உலகில் அவசர உணவுகள், கொழுப்பு எண்ணெய் கூடிய உணவுகளை உட்கொள்ளுவதால் பலர் பல நோய்களுக்கு உள்ளாவதாகவும் தெரியவந்துள்ளது. அந்த வகையில் சிறுவர்களிடையே எடுக்கப்பட்ட ஒரு கணிப்பில் நிறை கூடியவர்களில் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. 100 சிறுவர்களுக்கு என்ற கணக்கில் பார்த்தால்...

04-08 வயதினர் 100 பேரில் 6 பேர் அளவுக்கு அதிகமான நிறையுடையவர்கள் 09-12 வயதினர் 100 பேரில் 11 பேர் அளவுக்கு அதிகமான நிறையுடையவர்கள். 13-16 வயதினர் 100 பேரில் 12 பேர் அளவுக்கு அதிகமான நிறையுடையவர்கள். ஆகவே சிறுவர் முதல் பெரியோர் வரை எண்ணெய், கொழுப்பு, சீனி உணவுகளைத் தவிர்த்துக் கொண்டால் நீண்ட ஆரோக்கியம் பெற்று வாழலாம்.

## ஓய்வூதியம் சற்று அதிகரிப்பு!

தற்போது யேர்மனியில் ஓய்வூதியம் பெறுபவர்கள்.எதிர்வரும் 01-07-2018 முதல் உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியத்தை யேர்மனிய அரசு கூட்டி வழங்கவுள்ளது. எனவே இச்செய்தியை ஏனைய நட்புக்களுக்குத் தெரியப்படுத்தவும். அதாவது தற்போது ஒருவர் 500-00 யூரோ ஓய்வூதியம் பெறுவாரானால் 01.07.18 தொடக்கம் 516-10 யூரோ பெறுவார். நம்மவர்கள் பலர் நீண்டகாலம் கடும் உழைப்பின் பின் ஓய்வு பெற்றிருப்பீர்கள். ஆகவே ஏனைய தமிழ் உறவுகள் நட்புக்களுக்கு இச்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.01-07-2018ல் இருந்து நடைமுறைக்குவரும் (பென்சன்) ஓய்வூதிய அட்டவணையைக் கீழே காணலாம்

### ஆடிமாதம் அதிகரிக்கும் ஓய்வூதியம்

| Rente in € | West | | Ost | |
|---|---|---|---|---|
| bisher | Rente ab 1. Juli | Renten-plus | Rente ab 1. Juli | Renten-plus |
| 500 | 516,10 | 16,10 | 516,85 | 16,85 |
| 600 | 619,32 | 19,32 | 620,22 | 20,22 |
| 700 | 722,54 | 22,54 | 723,59 | 23,59 |
| 800 | 825,76 | 25,76 | 826,96 | 26,96 |
| 900 | 928,98 | 28,98 | 930,33 | 30,33 |
| 1000 | 1032,20 | 32,20 | 1033,70 | 33,70 |
| 1100 | 1135,42 | 35,42 | 1137,07 | 37,07 |
| 1200 | 1238,64 | 38,64 | 1240,44 | 40,44 |
| 1300 | 1341,86 | 41,86 | 1343,81 | 43,81 |
| 1400 | 1445,08 | 45,08 | 1447,18 | 47,18 |
| 1500 | 1548,30 | 48,30 | 1550,55 | 50,55 |
| 1600 | 1651,52 | 51,52 | 1653,92 | 53,92 |
| 1700 | 1754,74 | 54,74 | 1757,29 | 57,29 |



அதிசய உலகம்



# முதலில் எது வந்தது - கோழியா அல்லது கோழிமுட்டையா?

Dr.நிரோஷனின்

இந்த உலகில் வாழும் நமக்கு இன்று வரை பல கேள்விகளுக்குப் பதிலே தெரியாது! உதாரணமாக: விண்வெளியில் எங்கேயாவது அன்னிய உயிரினங்கள், அதாவது ஏலியன்ஸ் இருக்கின்றனவா, அல்லது இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது? இப்படி எத்தனையோ கேள்விகளுக்கு இன்று வரை பதில்களே கிடைக்கவில்லை. இதே போலத் தான் என்னையும் கொஞ்சக் காலமாக ஒரு கேள்வி போட்டு உறுத்திக் கொண்டே இருந்தது. உண்மை சொல்லப்போனால் அந்தக் கேள்வி என்னை மட்டும் இல்லை, இந்த உலகில் பலரை ஆட்டி வைத்தது. அது என்ன கேள்வி தெரியுமா? முதலில் வந்தது எது? கோழியா அல்லது முட்டையா? இது என்னடா கேள்வி என்று என்னிடம் கேட்பவர்களுக்கு இந்தக் கேள்வியில் இருக்கும் சிக்கல் புரியவில்லை என்று தான் சொல்லவேண்டும். எனவே அது என்ன சிக்கல் என்றும், இந்தக் கேள்விக்குரிய பதிலையும் அறிய விரும்பினால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!

சரி, முதலில் கோழியா அல்லது கோழிமுட்டையா வந்தது? இந்தக் கேள்வியில் இருக்கும் சிக்கல் என்ன என்று முதலில் பார்ப்போம். ஒரு கோழிமுட்டை ஒரு கோழியில் இருந்து வருகின்றது என்று எடுத்துக்கொள்வோம். அப்படி என்றால், அந்தக் கோழிமுட்டையை இட்ட கோழி எதில் இருந்து வந்தது? அதுவும் ஒரு கோழிமுட்டையில் இருந்து தானே வந்திருக்கவேண்டும்? அப்போ அந்தக் கோழி இருந்த கோழிமுட்டை எதில் இருந்து வந்திருக்கும்...? என்ன நண்பக்ரளே, இதில் இருக்கும் சிக்கல் புரிந்துவிட்டதா? இந்தக் கேள்வியை நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே போகலாம். எனவே, முதலில் எது வந்தது? கோழியா இல்லை கோழிமுட்டையா? இதற்கு அறிவியல் ரீதியான பதில் என்ன?

கோழி தான் முதலில் வந்தது என்று எடுத்துக்கொள்வோம். ஆராய்ச்சியாளர்கள் என்ன கண்டுபிடித்துள்ளார்கள் என்றால், கோழிமுட்டையின் கோது உருவாக்குவதற்குத் தேவைப்படும் OV-17 எனும் புரதம், கோழியில் மட்டும் தான் கிடைக்கிறது என்று. எனவே ஒரு கோழி இருந்தால் மட்டும் தான் அது OV-17 ஊடாக முட்டைக் கோதையும் அத்துடன் கோழிமுட்டையையும் இட முடியும். எனவே, கோழி தானே முதலில் வந்து முட்டையை இட்டது?

ஹ்ம்ம்... இது சரியாக இருக்கலாம் போலத் தான் இருக்கிறது, ஆனால் பொறுத்திருங்கள்! இதே விஷயத்தை வேறு மாதிரியும் சிந்தித்துப் பார்ப்போம். முதலில் முட்டை தான் வந்தது என்று எடுத்துக்கொள்வோம். பொதுவாக இனப்பெருக்கத்தின் போது இரு உயிரினங்களின் டி.என்.ஏ மூலக்கூறுகள் இரட்டித்துப் பெருகி சந்ததிகளுக்குக் கடத்தப்படுகிறது. இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், அப்படி இரட்டித்துப் பெருகும் போது, அந்த டீ.என்.ஏ. சில சமயங்களில் முழுவதும் இரட்டிப்பதில்லை. அது சிறிய மாற்றங்களுடன் இரட்டிப்பதைக் காணலாம். இப்படி ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் ஒரு உயிரினத்தின் டீ.என்.ஏ. மாறுபட்டுத் தான் புதிய புதிய உயிரினங்கள் உருவாகின்றன. எனவே, முன்னொரு காலத்தில் வாழ்ந்த கோழி போன்ற ஓர் உயிரினத்தின் டீ.என்.ஏ. மாற்றமடைந்து தான் இன்று நமக்குத் தெரிந்த கோழியினம் உருவாகியிருக்கிறது.

சரி, இது கொஞ்சம் குழப்பமாக இருக்கலாம், எனவே ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். அந்த முன்னொரு காலத்தில் வாழ்ந்த கோழி போன்ற உயிரினத்திற்கு ஒரு பெயர் வைக்கலாம். அதை முற்கோழி என்று அழைப்போம். எனவே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முற்கோழிகள் இடும் முட்டைகளில் டீ.என்.ஏ. மாற்றம் அடைந்து, கடைசியில் அந்த முட்டையில் இருந்து நாம் இன்று காணும் கோழி வெளியே வந்து விட்டது. இப்படிப் பார்த்தால், முதலில் வந்தது முட்டை தானே?

ஐயய்யோ.. வழக்கம் போல் குழப்ப ஆரம்பித்து விட்டேனா...? சரி பரவாயில்லை, இருக்கட்டும். இதைப் பற்றி கொஞ்ச நொடிகளில் பார்ப்போம். நான் இவ்வளவு நேரமும் முட்டை பற்றி கூறினேனே, ஆனால் இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. உண்மையில் கோழிமுட்டை என்பது என்ன? ஒரு கோழி இடும் முட்டையையா கோழிமுட்டை என்கிறோம், அல்லது ஒரு முட்டைக்குள் கோழி இருந்தால் தானா அதைக் கோழிமுட்டை என்கிறோம்? என்ன நண்பர்களே புரியவில்லையா? சரி, இப்படிப் பார்ப்போம். ஒரு குரங்கு முட்டை இடுகிறது என்று எடுத்துக்கொள்வோம். அந்த முட்டையில் இருந்து ஒரு யானை வெளியே வந்தால், அந்த முட்டையைக் குரங்குமுட்டை என்று அழைப்போமா, அல்லது யானைமுட்டை என்று அழைப்போமா? இப்போது வித்தியாசம் புரிகிறதா...?

சரி, இதற்கும், நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கும் என்ன ஒற்றுமை என்று கேட்கிறீர்களா? இதை வைத்துத் தான் இந்தக் கேள்விக்கே பதில் சொல்லப் போகிறேன். அதற்கு நாங்கள் இந்தப் பிரச்சனையை இரு பார்வையில் இருந்து பார்க்கவேண்டும்:

முதலாவது பார்வை என்னவென்றால், முன்னொரு காலத்தில் முற்கோழி, முற்கோழிமுட்டையை இட்டது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் டீ.என்.ஏ. மாற்றம் அடைந்து முற்கோழிகள் இட்ட முற்கோழிமுட்டையில் இருந்து ஒரு கோழி வெளியே வந்து விட்டது. அப்படி வந்த கோழி கோழிமுட்டையை இட்டது. எனவே, அந்தக் கோழி, முற்கோழிமுட்டையில் இருந்து வெளியே வந்த காரணத்தால், கோழி தான் கோழிமுட்டைக்கு முதலில் வந்தது.

இரண்டாவது பார்வை: முன்னொரு காலத்தில் முற்கோழிமுட்டை இட்ட முற்கோழி ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் கோழிமுட்டை இட்டு அதில் இருந்து கோழி வெளியே வந்து விட்டது. எனவே, அந்தக் கோழி கோழிமுட்டையில் இருந்து வெளியே வந்த காரணத்தால் கோழிமுட்டை தான் முதலில் வந்தது.

நண்பர்களே, இந்த இரு பார்வைகளையும் நீங்கள் ஒரு விஷயத்தைக் கவனித்தீர்களா? இதில் இருக்கும் ஒற்றுமை உங்களுக்குப் புரிந்துவிட்டதா? அது என்ன ஒற்றுமை என்றால்: இரு பார்வைகளிலும் கடைசியில் வருவது கோழி தான்! அதில் எந்த விதமான மாற்றுக்கருத்துமே இல்லை! முதலாவது பார்வையில் முற்கோழிமுட்டையில் இருந்து கோழி வருகிறது. இரண்டாவது பார்வையில் கோழிமுட்டையில் இருந்து கோழி வருகிறது. இரண்டிலுமே முட்டையில் இருந்து தான் கோழி வந்திருக்கிறது! எனவே நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு, அதாவது முதலில் கோழியா அல்லது முட்டையா வந்தது என்கிற கேள்விக்கு அறிவியல் ரீதியான பதில்:

**கோழிக்கு முதல் முட்டை தான் வந்தது!**

சரி சரி, நீங்கள் எல்லோருமே என்ன நினைக்கின்றீர்கள் என்று எனக்கு நல்லாவே புரிகின்றது, போதுமடா சாமி, இனி நான் முட்டையே சாப்பிட மாட்டேன் என்று தானே யோசிக்கின்றீர்கள்?

சரி, நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரிந்ததா? இல்லை, இன்று தானா இதை அறிந்துகொண்டீர்கள்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!



Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974


உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de

# அணுவினுள் ஒரு அகிலம்

சிந்தனை சிவவினோபன்



மறையப் போகும் ஒரு சில காலத்தில், உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது மட்டுமல்லாமல், தான் இருக்கும் துறையில் தன் மறைவின் பின் 20 வருடங்கள் வரை யாராலும் நினைக்கவே முடியாத பல சாதனைகளை நிகழ்த்தி மறைந்த மாபெரும் புத்திசாலி ஸ்டீவ் ஜாப்ஸ் ( Steve Jobs ) அவர்கள் கூறும் தாரக மந்திரம் மாற்றி யோசி (வூாமைெ னகைகநசநவெ). ஆனால் இப்போது நான் உங்கள் அனைவருக்கும் சொல்ல உள்ள தாரக மந்திரம் "முதலில் யோசி (Think First)". ஏனென்றால் இவ்வுலகில் சிந்திக்கவும் செயல்படுத்தவும் ஆயிரம் கோடிக்கு மேற்பட்ட ரகசியங்கள் ஒளிந்துள்ளது. ஆனால் அதைக் கண்டு வியக்குமளவு ஆற்றல் எம்மிடம் குறைந்து கொண்டே வருகின்றது.

எங்களிடம் ஆறாவது அறிவு உண்டு, பகுத்தறிந்து பல ஞானங்களை பெற்றுக் கொண்டுள்ளோம். இன்று ஏழாம் அறிவைப் பற்றிப் பார்க்கப்போகின்றோம். பார்த்ததைக் கொண்டு சிந்தித்து பலதைக் கண்டுபிடிப்பது ஆறமறிவு. பாராமலேயே உணராமலேயே உண்மையை உணரும் ஏழாமறிவைத் தூண்டும் இந்தக் கட்டுரை சற்று குழப்பமானதாக இருப்பதற்கு வாய்ப்புண்டு ஆகவே துல்லியமாக நிறுத்தி நிதானமாக வாசிக்கவும், நானும் எளிமையாக விளங்கப்படுத்த முயல்கின்றேன்.

அணு என்றால் என்ன என்று கேட்டால் எங்கள் மனக்கண்ணில் உடனடியாக ஒரு வட்ட வடிவம் தோன்றும். இன்னும் சற்று உற்றுப் பாரத்தால் அது ஒரு கோளவடிவமாகத் தோன்றும் மற்றும் இலத்திரன்கள் சுற்றிக் கொண்டு இருப்பது போன்று தோன்றும். இவை எல்லாம் நாம் கற்றுக்கொண்ட பள்ளிப்பாடத்தால் உருவாகும் விம்பங்கள். நாம் இதுவரையும் அணுவையும் பார்த்ததில்லை அதைச் சுற்றும் இலத்திரனையும் பார்த்ததில்லை, படித்ததால் மனதில் தோன்றிய ஞானம் அதுவே ஆறாமறிவு. இந்த இலத்திரன் பற்றிய மனத் தோற்றத்தை அப்படியே நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்போது அகிலத்தை எடுத்துக்கொள்வோம், பூமி என்று சொன்னால் உடனடியாக எங்கள் மனதில் ஒரு வட்ட வடிவம் அல்லது கோள வடிவம் தோன்றும், அது சூரியனை மையமாக வைத்து வட்டப் பாதையில் அல்லது நீள்வட்டப் பாதையில் சுற்றுவது போன்று தோன்றும். ஆனால் இதுவரை இந்தக் காட்சியை உங்கள் கண்கள் கண்டதுண்டா? இல்லை. வெறும் சித்தரிக்கப்பட்ட காட்சிகள் தான் விஞ்ஞானிகளாலும் நாசாவாலும் வெளியிடப்பட்டுள்ளது அவர்களுக்கு எப்படி அந்த ஞானம் வந்தது அதுவும் ஆறாமறிவு தந்த கொடைதான்.

தமிழில் பல சொற்கள் இருக்கின்றது, உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் "பார்த்தல், கவனித்தல், உற்றுநோக்கல்" இவற்றின் அர்த்தங்கள் எல்லாம் ஒரே செயலைத்தான் குறிக்கின்றது ஆனால் அதன் விளைவுகள் வேறுவிதமானது. விஞ்ஞானிகள் கவனித்து உற்று நோக்கிய படியால் பல விடயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றது, நாம் அதை பார்த்துப் படிக்கின்றோம் அத்தோடு எம் செயல் முடிந்து விடுகின்றது. அது தான் பார்த்தலுக்கும் உற்று நோக்குதலுக்கும் உள்ள வித்தியாசம். அதனால்த் தான் சொன்னேன் இன்று முதல் நாம் அனைவரும் எம்முடைய தாரக மந்திரமாக "முதலில் யோசி (வூாமைெ குசைளவ)" என்பதை உள்வாங்குவோம் என்று. சிந்தித்தால் கண்டுபிடிக்க ஆயிரம் விந்தைகள் அகிலத்திலுண்டு. அதில் ஒன்றுதான் ஒருங்கிசைவு.

ஒருங்கிசைவு என்றால் தோற்றத்தில் ஒரே போல் இருக்காது, முற்றிலும் வேறுபட்டதாகக் கூட இருக்கலாம் ஆனால் அதன் இயல்பும் பௌதீக விளைவும் ஒன்றே போல் இருக்கும். இப்போது முதலில் சொன்னேனல்லவா ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் என்று, ஆம் அந்த அணுவைப் பற்றியும் அதைத் தொடர்ந்து பார்த்த அகிலத்தைப் பற்றியும் யோசியுங்கள். அணுவினுள் இலத்திரன் கருவை மையமாக வைத்து சுற்றுகின்றது. அகிலத்தில் கோள்கள் சூரியனை மையமாக வைத்து சுற்றுகின்றன. அணுவினுள் சக்தி இழப்பு என்பது சக்தி மட்டங்களாக வெளிப்படுகின்றன, அகிலத்தில் கோள்களும் சக்தி வட்டங்களாகத் தான் ஒன்றை விட்டு ஒன்று மிக மிக சிறிய அளவில் விட்டு விலகிக் கொண்டுள்ளன.

இப்போது உங்களுடைய ஏழாம் அறிவைத் தூண்டும் விடயத்தை நான் சொல்லப் போகின்றேன், நுணுக்கமாக உற்றுக் கவனியுங்கள். அணு மிகச் சிறிய ஒன்று அகிலம் மிகப் பெரிய ஒன்று இரண்டையும் எங்கள் கண்கள் சாதாரணமாகப் பார்க்கமுடியாது. இரண்டும் ஒத்திசைந்து போகக்கூடியது என்றால் ஆச்சரியமாக இருக்கும் ஆனால் அதுவே உண்மை. அது எப்படி சாத்தியம் என்றால், நீங்கள் ஒரு செயற்கைக்கோளில் ஏறி விண்வெளிக்குச் சென்றால் அங்கிருந்து பூமியைப் பார்க்கும் போது ஒரு சிறிய பந்து போலவே தெரியும், பூமியில் நடக்கும் மக்களோ அல்லது யானையோ அல்லது திமிங்கலமோ அல்லது அதையும் உள்வாங்கியுள்ள கடலோ எதன் அசைவும் கண்களுக்குத் தெரியாது. கண்ணுக்கு பூமி ஒரு சிறிய பந்து போலத் தெரியும். இப்போது உங்கள் வீட்டில் உள்ள ஒரு சிறிய பந்தை எடுத்துக் கொள்ளுங்கள் இந்தப் பந்து ஏன் ஒரு பூமியாக இருக்கக் கூடாது என்று யோசித்துப் பாருங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

ஆம், அணுவை ஒரு அண்டவெளியாக எடுத்துக் கொண்டால் அதற்குள் பல பால் வெளிகள் அந்த பால் வெளியில் பல நட்சத்திரங்கள் அந்த நட்சத்திரத்திற்கு கோள்கள், அதில் ஒரு கோள் பூமி, அந்தப் பூமியில் மக்கள் என்று இருந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். இதைக் கேட்க சற்று குழப்பமாக இருக்கும் தலை சுற்றும், சில வேளைகளில் முட்டாள்த் தனமாகக் கூட இருக்கும். ஏன் என்றால் நாம் நம்மைத் தாண்டி, புவியைத் தாண்டி செவ்வாய்க்கு கிரகத்தில் ஆராய்ச்சி செய்கின்றோம் ஆனால் எம்முள்ளேயே பல கோடி அகிலங்கள் உருவாகி மறைகின்றதோ என்ற சிந்தனை ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும். ஆனால் நியூட்டன் புவியீர்ப்பு பற்றி நிறுவும் வரை எங்கள் தலைகளிலும் பல முறை பழங்கள் விழுந்துள்ளது, ஏன் தேங்காய் கூட விழுந்துள்ளது ஆனால் நாம் புவியீர்ப்பைப் பற்றி சிந்திக்கவோ, அதை நிறுவவோ முயலவில்லை. ஆகவே சிந்திக்கத் தொடங்குங்கள், எங்கள் முன்னோர்கள் எத்தனையோ பல ஆற்றலைக் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். அதை தூசிதட்ட, யோசிக்க ஆரம்பியுங்கள். கிருஷ்ண பகவான் தன் திருவாயைத் திறந்து அகிலத்திக் காண்பித்தார், சிவன் பிரமாண்ட உருவெடுக்க அவருள் அரக்க குரு அனைத்து அகிலங்களையும் கண்டார் என்ற கற்பனைக் கதைகளுக்கு, யாரோ ஒரு ஆங்கிலேயர் வந்து உயிர் கொடுத்து நிறுவுவதற்கு முன் நாமே சாதிப்போம்.


## ART EXHIBITION



19th-30th June 2018

You are cordially invited to an Art Exhibition of over 100 paintings on canvas produced a local artist. All paintings will be available for purchase

Bourne Hall
(Foyer Gallery)
Spring Street,Ewell
Surrey KT17 1 UF

FREE ENTRY

UK

Gallery Opening hours
Tuesday-Saturday
9.00am-5.00 pm
Bourne hall is closed
Sunday & Mondy





Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

# பொருத்தமில்லாத ஜோடிகள்

## செருப்பாகக்கூட இருக்க முடியாது !!




கௌசி

சமூக அமைப்பு உருவாகாத காலத்தில் யாரும் யாரொடும் வாழலாம் என்றிருந்தது. ஆனால், குடும்பம் என்று வருகின்ற போது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தின் மூலமே உருவாக வேண்டிய அவசியம் கருதி திருமணநடைமுறை உலகிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆதிகாலத்தில் களவு மணத்தில் காணப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக ஆரியருடைய வரவின் பின் மாமுது பார்ப்பன் மறைவழி காட்டிடத் தீவலம் வந்ததுடன் அருந்ததி காட்டல் என்ற வட இந்திய மரபு சேர்ந்து திருமணங்கள் நடத்தப்பட்டது.

திருமணவாழ்க்கை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தின் முன் திருமணத்தின் பின் என்னும் திருப்பத்தை ஏற்படுத்தும் வாழ்க்கையாக அமைவது இயற்கையே. பிறப்பிலிருந்து வெவ்வேறுபட்ட குணநலன்களுடைய குடும்பங்களிலிருந்து பிரிந்து வந்து ஒரு குடும்பத்தை உருவாக்கியதற்குவதற்கு பற்பல விட்டுக்கொடுப்புக்கள், அர்ப்பணிப்புக்கள், பாரிய பொறுமை, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு போன்றவை அவசியமாகின்றன. இத்தனை பண்புகளும் இணைகின்ற போதுதான் கணவன் மனைவிகளிடையே ஒருமித்த காதல் ஏற்படுகின்றது. அந்நியோன்யமான உறவு தோன்றுகிறது. நல்ல குடும்ப வாழ்க்கை அமைகின்றது. இவ்வாறு ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்பி நிறுத்திய பின் அதை உடைத்தெறிய நினைக்கலாமா? ஆனால், இன்று பல குடும்பங்களிடையே கணவன் மனைவி வாழும் வாழ்க்கை தாமரை இலைத் தண்ணீர் போன்று ஒட்டியும் ஒட்டாதும் வாழும் வாழ்க்கையாக அமைந்து விடுகின்றது. சமூகத்துக்குப் பயந்து தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை மனதில் நிறுத்திப் பல குடும்பங்கள் பெயருக்குக் கணவன் மனைவியாக வாழுகின்றனர். இது எதனையும் மனதில் கொள்ளாதவர்கள் ஒத்துவரவில்லை என்றவுடன் விவாகரத்தை பெற்றுவிடத் துடிக்கின்றார்கள்.

இருவரில் ஒருவருடைய விருப்பிலேதான் அதிகமான விவாகரத்துக்கள் நடக்கின்றன. ஒருவர் விருப்பிற்கு விட்டுக் கொடுப்பவர் ஏன் இப்படி நடந்தார் என்ற கேள்வியுடனேயே காலமெல்லாம் வாழுகின்றார். ஆண்கள் குடித்துத் தம் வாழ்க்கையை அழிக்கின்றார்கள். பெண்கள் மனஅழுத்தத்தினால் நோயாளியாகின்றார்கள். விவாகரத்தில் முக்கியமாகப் பாதிக்கப்படுபவர்கள் பிள்ளைகளே. இப்பிள்ளைகள் தீவிர நடத்தையுள்ள பிள்ளைகளாகவும், மன அழுத்தமுள்ள பிள்ளைகளாகவும், பாடசாலைகளில் மற்றைய பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் பிள்ளைகளாகவும் காணப்படுகின்றார்கள். வீட்டில் எமது சண்டைசச் சரவுகளைப் பார்த்து பிள்ளை கெட்டுவிடும் என்று நினைத்து விவாகரத்துப் பெறுபவர்கள், தாய்தந்தையரைப் பிரிந்து வாழும் பிள்ளைகளும் கூட மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டு நடத்தை கெட்டு வாழ்வார்கள் என்னும் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். கைகளில் கத்தியால் காயங்களை ஏற்படுத்திக் கொண்டு, போதைவஸ்துக்கு அடிமைகளாகி, மனநிலை பாதிக்கப்பட்டுக் காணப்படும் பிள்ளைகளின் புள்ளிவிபரமானது கணிப்பின்படி தாய்தந்தையரின் பிரிவில் வாழ்கின்ற பிள்ளைகளே அதிகமாகக் காணப்படுபவர்களாகக் கூறுகிறது.

விவாகரத்துப் பெறத் துடிப்பவர்கள் கூறும் காரணங்கள் பலவகையாக காணப்படுகின்றன. சாதி, அந்தஸ்து, குடும்பப்பகை போன்ற காரணங்களைக் காட்டி எமது விருப்பம் இல்லாமல் பெற்றோர் பார்த்துச் திருமணம் செய்து வைக்கின்றார்கள். இதனால், எம்மால் மனதால் ஒத்துப் போக முடியவில்லை. எம்மிடையே ஒருமித்த கருத்துக்கள் இல்லை என்று கூறிப் பிரிபவர்கள் ஒருவிதமாகக் காணப்படுகின்றார்கள். திருமணத்தின் பின் அதிகமான வேலைப்பழு காணப்படுவதாகவும் வீட்டுவேலை முழுவதுமாக நானே செய்யவேண்டும்.

காதலிக்கும் போது இருவரும் இணைந்தே செய்வோம் என்றவர் இப்போது எந்தவித உதவியும் செய்வதில்லை. அவருடைய வேலையையும் நானே சேர்த்துச் செய்ய வேண்டியுள்ளது. இதனால், இருவருக்கும் இடையில் சண்டைசச்சரவுகள் அதிகமாக ஏற்படுவதாகவும் பிரியவேண்டிய மனநிலை ஏற்படுவதாகவும் சொல்கின்றார்கள். இவ்வாறு நினைக்கும் பெண் விவாகரத்தால் வேலைப்பழு இன்னும் அதிகமாகும் என்று உணர்வதில்லை. ஐரோப்பிய நாடுகளில் வாழும் பெண்கள் ஆண்களை விட கல்விலும் தரத்திலும் உயர்வடைந்து செல்லுகின்ற சூழ்நிலையில், காதலிக்கும் போது இருந்த வேகம் கல்யாணத்தின் பின் இவருக்கு இல்லை. நானோ வேலைத்தளங்களில் படிக்குப் படி முன்னேறிக் கொண்டு போகின்றேன். இவருக்கு எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று அலுத்துக் கொள்ளுகின்ற பெண்கள் அதிகம். குடும்பமாக வாழும் தம்பதிகள் நினைக்கின்றார்கள் நாங்கள், எங்களுடையது என்ற ஒரு குடும்ப அமைப்பு இல்லையென்று. ஆனால், சேர்ந்தே வாழும் பெற்றோர்கள் வாழப்போகும் வருடங்கள் அதிகம் இல்லை என்பதையும் அவர்களால் வீட்டில் பாரிய வேலைப்பழு குறைவதையும், நல்ல அனுபவசாலிகளான பெற்றோர்களால், தமது பிள்ளைகள் சரியான முறையில் வளர்க்கப்படுவார்கள் என்பதனையும் இவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. ஐரோப்பிய நாடுகளில் அதிகமான விவாகரத்துக்குக் குறட்டை காரணமாகின்றது. இரவில் தூங்கமுடிவதில்லை. இதனால், பகலில் வேலைத்தளத்தில் சரியான ஒருமைப்பாட்டுடன் வேலை செய்ய முடிவதில்லை. இவருடைய காலுறை மணத்தைத் தாங்க முடியவில்லை. இவ்வாறான அற்ப காரணங்களுக்காகவெல்லாம் தற்காலத்தில் விவாகரத்து பெறுவது வழக்கமாகிவிட்டது.

தனித்து வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையே விவாகரத்துப் பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இதனாலேயே விட்டுக்கொடுப்புக்கள் இருவருக்கிடையில் இல்லாமல் போகின்றது. ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலைமை புலம்பெயர்ந்த தேசங்களில் இல்லாமல் போய்விட்டது. பணமோ, மற்றைய உதவிகளோ இலகுவாக அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதனால், தங்கி வாழவேண்டிய சூழ்நிலையற்ற சுதந்திரத்தை ஆணும் பெண்ணும் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், இறுதி காலகட்டத்தில் எந்த உயிரும் ஒரு ஆதரவைத் தேடும். அந்த உறவு கணவனாக இருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும் என்று பெண்ணும், மனைவியாக இருந்தால் எவ்வளவு அணைப்பாக இருக்கும் என்று ஆணும் நினைத்துப் பார்ப்பதில்லை.

மணவாழ்க்கையில் பல எதிர்பார்ப்புக்கள் இருவரிடையேயும் இருப்பது இயற்கை. இதனை இருவரும் புரிந்து புரிந்துணர்வுடன் நடக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒட்டிய உறவை வெட்டிவிடுவது இலகுவானது. ஆனால், சேர்ப்பது இலகுவான காரியமில்லை. எதிர்காலத்தில் அது பாரிய பிரச்சனைகளைக் கொண்டு வந்தே சேர்க்கும். இளந்தம்பதியினரின் சின்னச்சின்னப் பிரச்சினைகளுக்குப் பெற்றோர் தலையிடுதல் தவிர்க்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகின்றது. பெற்றோர் இருக்கின்றார்கள் என்னும் தைரியமே பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டுகின்றது. பிரச்சினைகளை அவர்களே பேசித் தீர்த்துவைத்தால், இருவரிடமும் புரிந்துணர்வு மேம்படும்.பிரச்சினை என்று ஓடினால், விவாகாரத்தின் பின் பிரச்சினை வராது என்பது என்ன நிச்சயம். பின் அப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க எங்கே ஓடமுடியும். காதல் பலருடன் ஏற்படலாம். திருமணம் ஒருவருடனேயே இருக்க வேண்டும். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிராகத் திருமணம் விளங்க வேண்டும் என்ற உறுதியுடனேயே திருமணத்திற்கு முடிவெடுங்கள். இல்லையென்றால், பொருத்தமில்லாத ஜோடிகள் செருப்பாகக்கூட இருக்க முடியாது !! அல்லவா.



# கண்களின் பாதுகாப்பு பற்றிய சில தவறான நம்பிக்கைகள்



Dr IN

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

'இவள் எந்த நேரமும் ரீவீக்கு முன்னாலைதான். கண்கெடப் போகுது எண்டு சொன்னாலும் கேக்கிறாளில்லை.'
மம்மல் இருட்டுக்கை கிடந்து கொண்டு படிக்கிறான். லைட்டையும் போடுறானில்லை. கண் பூந்தப் போகுது."
இவை நாம் அடிக்கடி கேட்கும் வார்த்தைகள்தான். இவற்றில் எவ்வளவு தூரம் உண்மையுண்டு?
கண்கள் எமது புலன்களில் மிக முக்கியமான ஒன்றாகும். கட்புலன் எமக்கு பிறக்கும் போதே இயல்பாகக் கிடைத்து விடுகிறது. நாளாந்தம் அதனுடனேயே வாழ்வதால் அது இல்லாத வாழ்வு பற்றி எவரும் யோசிப்பதே இல்லை. ஆயினும் ஏற்கனவே இருந்த பார்வையை இழந்த பின்னான வாழ்வின் துயரம் அளவிட முடியாததாகும்.
வயதாகும் போது பார்வையின் கூர்மை குறைவதற்கும், கண்நோய்கள் ஏற்படுவதற்குமான சாத்தியம் அதிகமாகும்.
ஆயினும் பார்வை இழப்பிற்கு வயது மட்டும் காரணமல்ல. எமது கவலையீனமும், அக்கறையின்மையுமே முக்கிய காரணங்களாகின்றன. கண் வைத்தியரிடம் ஒழுங்கான கால இடைவெளியில் காண்பிப்பதன் மூலம் சுமார் 40 முதல் 50 சதவிகிதமான பார்வை இழப்புக்களை தடுக்க முடியும்.

எந்தவித வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிடிலும் கூட 40 வயதிற்கு பின் கண் மருத்துவரிடம் காட்டி பரிசோதித்துக் கொள்வது அவசியமாகும். தமது குடும்பத்தில் அல்லது பரம்பரையில் கண் நோயுள்ளவர்களுக்கு இது மேலும் முக்கியமானதாகும்.
உங்கள் பார்வையில் குறைபாடு புலப்படும் மட்டும் கண் மருத்துவரை காண்பதைத் தள்ளிப் போட வேண்டாம். ஏனெனில் ஒரு கண்ணில் கோளாறு இருந்தாலும் மற்றைய கண் அதனை ஈடு செய்துவிடுவதால் நோயாளி அதனை உடனடியாக உணர மாட்டார். எனவேதான் கண்பார்வைக் கோளாறுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க ஒழுங்கான மருத்துவப் பரிசோதனை அவசியமாகும்.
முதலில் மங்கலான வெளிச்சத்தில் வாசிப்பதை எடுத்துக் கொள்வோம். எம் பலரது நம்பிக்கைகளுக்கு முற்றிலும் எதிர்மாறாக குறைந்த வெளிச்சத்தில் வாசிப்பதால் பார்வைக்கு பாரிய பாதிப்பு எதுவும் ஏற்படுவதில்லை. ஆயினும் அவ்வாறு வாசிப்பதால் கண்கள் விரைவில் களைப்படைந்து விடும் என்பது உண்மையே.





வாசிக்கும் போது படிக்கும் ஒளிவிளக்கின் வெளிச்சம் தாளின் மேல் நேரடியாக விழுவதே சிறந்ததாகும். முதுகிற்குப் பின்னிருந்து உங்கள் தோள்களுக்கு மேலாக வெளிச்சம் வாசிக்கும் தாளில் விழுவது சிறந்ததல்ல. அதேபோல ஒளிவிளக்கு உங்களுக்கு முன் இருப்பதும் நல்லதல்ல. சுற்றிவர ஒளி பரவ முடியா மறைப்பினால் (Shade) மூடப்பட்டு, வெளிச்சம் நேரடியாக உங்கள் புத்தகத்தின் மீது மட்டும் விழ வைக்கும் மேசை விளக்கே (Table Lamp) நல்லதெனலாம்.
பார்வைக்கு குறைபாட்டிற்காக கண்ணாடி அணிபவர்களில் பலர் அதனைத் தொடர்ந்து அணிந்தால் மேலும் விரைவாகப் பார்வை பழுதாகிவிடும் என எண்ணுகிறார்கள். இடையிடையே அதனைக் கழற்றி கண்ணுக்கு ஓய்வு அளிப்பது நல்லது என நினைக்கிறார்கள். இதுவும் ஒரு தவறான கருத்தே.

வாசிப்பதற்காக அல்லது தூரப் பார்வைக்காக உங்களுக்கு கண்ணாடி தரப்பட்டிருந்தால் அதனை அணியாதிருப்பது நல்லதல்ல. கண்ணாடி இல்லாது கண்ணைச் சுருக்கி, சிரமப்படுத்தி வாசிப்பதும், தூர உள்ள பொருட்களைப் பார்க்க முயல்வதும் (உதா- ரீவீ பார்ப்பது, பஸ் போர்ட் பார்ப்பது) உங்கள் கண்களுக்கு வேலைப்பளுவை அதிகரித்து சோர்வடையச் செய்யும்.

தொடர்ந்து கண்ணாடி அணிந்திருப்பது உங்கள் பார்வைக் குறைபாட்டை அதிகரிக்கச் செய்யாது. அதேபோல வேறு கண் நோய்களையும் கொண்டு வராது.
கரட் சாப்பிடுவது கண்ணுக்கு நல்லது என்பது எல்லோரதும் நம்பிக்கையாகும். இது ஓரளவு மட்டுமே உண்மையாகும்.
கரட்டில் விட்டமின் A இருக்கிறது. இது விட்டமின் A குறைபாட்டினால் வரக் கூடிய கண் நோயைத் தடுக்கும் என்பது உண்மையே. கண்ணுக்கு வேறு பல விற்றமின்களும் தேவைப்படுகின்றன.

தொடர்ச்சி 12ம் பக்கம்

CENTURY Travels GmbH

Rheinische Strasse 29
44137 Dortmund

Steeler Strasse 150
45139 Essen

Emirates

Colombo
ab 699 €-799 €

Sommer Special JULI/ AUGUST

Fon: 0231 557 4319 / 0231 5896 557
Mob: 017621682149 Nishanthan

Emirates

Unsere Services
Mietwagen/ Versicherung/Pauschalreisen/Hotels/ Visum Service/Flughafen Abholung
Email: info@centurytravels.de

# எனக்கு இப்போதும் கேமரா கூச்சம் இருக்கிறது!




எனக்கு இப்போதும்கூட அந்தக் கூச்சம் இருக்கிறது. ஆனால், அதைக் கையாளும் வழிமுறைகள் இப்போது எனக்குத் தெரிந்திருக்கின்றன என்று பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே கூறியுள்ளார்.

வெற்றிகள் நம்மை வாழ்க்கையின் உச்சிக்குக் கொண்டு செல்லும்போதுதான் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே திரையுலகில் வெற்றியாளராக அறியப்பட்ட தீபிகா படுகோனே "பத்மாவத்" வெற்றிக்குப் பின் புகழ் உச்சியில் மேலும் ஒரு அடி முன்னேறிச் சென்றிருக்கிறார்.

வெற்றியின் உச்சம், திரைக்கதை தேர்வு, திருமணத்துக்குப் பின் நடிப்பது என பல்வேறு விஷயங்கள் குறித்தும் தீபிகா பேட்டியளித்துள்ளார்.

அந்தப் பேட்டியிலிருந்து..

"பத்மாவத்" வெற்றி உங்கள் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

எதைச் செய்தாலும் அதில் ஓர் அர்த்தம் இருக்க வேண்டும். அந்தப் பணியின் பின்னால் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஏதாவது சில மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். யாரேனும் சிலரது வாழ்க்கையில் நம் வேலை ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதைத்தான் "பத்மாவத்" எனக்கு உணர்த்தியிருக்கிறது.

நான் தேர்வு செய்யும் கதைகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். "பிக்கு" என்பது ஒரு சிறிய படம்தான். ஆனால், அதில் ஓர் ஆழம் இருக்கிறது. கதைக்களத்துடன் எனக்கு ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டும். அப்போதுதான் நான் அந்தக் கதையைத் தேர்வு செய்வேன். எனது தெரிவுகள் பட்ஜெட் அடிப்படையில் அமைவதில்லை. அப்படி இருந்திருந்தால் நான் "ஃபைண்டிங் ஃபேனி" (Finding Fanny) செய்திருக்கவே மாட்டேன்.

வெற்றியை எப்படிக் கையாள்வது?

உங்கள் வெற்றியைக் கையாள தன்னிலை உணருங்கள். நீங்கள் நிற்கும் இடத்தை, இலக்கை அடைய யாரெல்லாம் உதவினார்கள், எத்தகைய முடிவுகள் எல்லாம் உங்களை அந்த இடத்துக்குக் கொண்டு சேர்த்தது என்பதை உணருங்கள். இதை ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால் வெற்றிக்கு வேர் வைத்தவர்களையும் வைத்த நிகழ்வுகளையும் மறக்காதீர்.

**கேமரா கூச்சத்தை எதிர்கொள்வது குறித்து..**

எனக்கு இப்போதும்கூட அந்தக் கூச்சம் இருக்கிறது. ஆனால், அதைக் கையாளும் வழிமுறைகள் இப்போது எனக்குத் தெரிந்திருக்கின்றன. கேமராவுக்கு வெளியே இருந்த கூச்சத்தை கேமராவுக்கு முன்னாலும் கொண்டுவந்ததுதான் நான் செய்த தவறு என நினைக்கிறேன். என்னை இயக்கிய இயக்குநர்கள் என்னைப் புரிந்துகொண்டு எனது கூச்சத்தை உடைத்தெறிந்தனர்.


**கதைகளைத் தேர்வு செய்வதில் பின்பற்றும் நடைமுறை?**

ஆரம்ப காலகட்டத்தில் பெரிய ப்ராஜக்ட் என்பதற்காகவும் சில பெயர்கள் திரையில் ஒன்றாக வரும்போது தாக்கம் இருக்கும் என்பதற்காக கதையை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சில படங்களை ஓகே செய்திருக்கிறேன். வெற்றிகளைச் சுவைத்தபின் தன்னம்பிக்கை அதிகரித்திருக்கிறது. இன்று என்னால், தைரியமாக சில கதைகளுக்கு நோ சொல்ல முடிகிறது. வெற்றிகள் எனக்கு நம்பிக்கையை மட்டுமல்ல சுதந்திர சிந்தனையையும் தந்திருக்கின்றன. என்னை நானே வெளிப்படுத்தும் திறன் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்போதெல்லாம் எனக்குக் கூடுதல் அதிகாரம் கிடைத்ததுபோல் உணர்கிறேன்.

**அடுத்த படம் என்னவாக இருக்கும்?**

"யே ஜவானி ஹே தீவானி" (Yeh Jawaani Hai Deewani) படம் போல் ஒன்று பண்ணமாட்டீர்களா? என என்னிடம் ஏராளமானோர் கேட்கின்றனர். ஆனால், அதுபோன்ற காதல் கதைகள் இப்போது வருவதில்லை. எல்லோரும் பயோபிக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. எனக்கு இலகுவான வேடிக்கை ததும்பம் கதைகள் மீது ஆர்வம் அதிகம். அந்த மாதிரியான கதை இன்னும் என்னிடம் வரவில்லை.

"பத்மாவத்"துக்குப் பிறகு வாழ்க்கை எப்படி இருக்கிறது?



எனது பெற்றோர்கள் வீட்டைக் கட்டி முடிக்க உதவிக் கொண்டிருக்கிறேன். எனது வீட்டை ஒழுங்குபடுத்துகிறேன். எனக்கு அது மிகவும் பிடித்த வேலை. எனது அலுவலகத்தின் மீதும் கவனம் செலுத்தி வருகிறேன். கணக்குகளை முடிப்பதில் ஆர்வம் காட்டுவதோடு சில இமெயில்களுக்கு பதில் அனுப்புவது போன்ற வேலைகளைச் செய்து வருகிறேன். இவை எல்லாம் நான் ரசித்துச் செய்யும் செயல்கள்.


**திருமணத்துக்குப் பின் நடிப்பீர்களா?** எனது தொழில் என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நான் விரும்பினால் அதிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ளலாம்.ஆனால், குடும்பம், வீடு, பெற்றோர், திருமணம் இவை எல்லா எனக்கு மிகமிக முக்கியமானவை. இன்றைய காலகட்டத்தில் நான் என்னை வேலை பார்க்கும் மனைவியாகவும், வேலைக்குச் செல்லும் தாயாகவும் பொருத்திக் கொள்ள முடியும். நான் அவ்வாறு வேலைக்குச் செல்லா விட்டால்தான் என்னைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் பைத்தியம் பிடிக்கும் அளவுக்கு தொந்தரவு ஆகிவிடுவேன் என நினைக்கிறேன் எனக் கூறியுள்ளார்.







எங்கள் மேதின வாழ்த்துக்கள்





# கெஞ்சிக் கேட்கிறேன்...
# "அஞ்சே அஞ்சு நிமிஷம் எனக்கு மன அமைதி வேணும்"



பல ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல அமெரிக்க ராக் பாடகி அலானிஸ் மோரிஸ்ஸெட் (Alanis Morissette) ஒரு பத்திரிகைக்குப் பேட்டியளித்தார். பேச்சுவாக்கில் அவர் சொன்ன ஒரு வாசகம் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தது. "கெஞ்சிக் கேட்கிறேன்... அஞ்சே அஞ்சு நிமிஷம் எனக்கு மன அமைதி வேணும்" என்பது அந்த வாசகம். உலகமறிந்த ராக் பாடகி... செல்வத்துக்கோ புகழுக்கோ குறைவில்லை... ஆனால், எந்த அளவுக்கு அவர் மன வேதனை அடைந்திருந்தால், மன அமைதி வேண்டும் என்று கேட்டிருப்பார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. 'மன அமைதி' என்கிற இரண்டெழுத்து மந்திரம் வசப்பட்டால் போதும்... எதிலும், எங்கும் வெற்றியே! ஆனால், எல்லோருக்கும் எளிதாக அது வாய்ப்பதில்லை. பரபரப்பான மனம்கொண்ட ஒருவரைவிட, மன அமைதியுள்ளவர் சிறப்பாகச் சிந்திப்பார். தினமும் கொஞ்ச நேரத்தை, மனதை அமைதிப்படுத்தச் செலவழித்துப் பாருங்கள்... உங்களால் எவ்வளவு அற்புதமாக, சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை நீங்களே அறிவீர்கள். இதை எளிமையாகச் சுட்டிக்காட்டும் கதை இது.

நம் ஊரில் வயற்காட்டுக்கு நடுவே பெரும்பாலும் சோளக்கொல்லை பொம்மைதான் இருக்கும். அரிதாக, சில இடங்களில் கீற்றுக்கொட்டகை போட்டிருப்பார்கள். அதுவும் கரும்புப்பாகு காய்ச்ச, கிணற்று மோட்டாரைப் பாதுகாக்க, சம்பந்தப்பட்ட நிலத்தின் சொந்தக்காரருக்கான பிரத்யேக வசதிக்காக அது போடப்பட்டிருக்கும். ஆனால், அமெரிக்க விவசாயிகள் அப்படி அல்ல. தங்கள் வேளாண் நிலங்களுக்கு நடுவே ஒரு சிறிய கட்டடத்தையே கட்டிவைத்திருப்பார்கள். அதை, ஒரு பெரிய தகரக் கூரை ஷெட் என்று சொல்லலாம். அதில் கால்நடைகளையும் தானியங்களையும் பாதுகாத்து வைப்பார்கள். அதற்குப் பெயர் ஹபார்ன்' (Barn). அங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது இந்தக் கதை.

அலானிஸ் மோரிஸ்ஸெட்

அவர் ஒரு விவசாயி. அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் ஒரு சிறிய பண்ணை வீட்டில் இருந்த அவர், பல ஆண்டுகளாகத் தன் கையில் ஒரு வாட்ச் கட்டியிருந்தார். அவரைப் பொறுத்தவரை அது வெறும் கைக்கடிகாரம் அல்ல... சென்டிமென்ட். பல நல்ல தருணங்கள், விஷயங்கள், வெற்றிகள் அவருக்கு நிகழ்ந்ததற்கு அந்தக் கடிகாரம்தான் காரணம் என்கிற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஒருநாள் பண்ணை வேலையெல்லாம் முடிந்து வெளியே வந்த பிறகுதான் கவனித்தார். அவர் கையில் கட்டியிருந்த வாட்ச்சைக் காணவில்லை. உடனே பரபரப்பாகி, தன் விவசாயக் கிடங்குக்குள் (Barn) போய்த் தேட ஆரம்பித்தார். எவ்வளவு நேரம் தேடியும் கிடைக்கவில்லை. கவலையோடு வெளியே வந்தார்.

அவருடைய கிடங்குக்கு வெளியே சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவருக்கு உடனே ஒரு யோசனை வந்தது. "டேய்... பசங்களா!" என்று அழைத்தார். சிறுவர்கள் ஓடிவந்தார்கள். "இந்தக் கிடங்குக்குள்ள என் வாட்ச் காணாமப் போயிடுச்சு. கண்டுபிடிச்சுக் குடுக்குறவங்களுக்கு அருமையான பரிசு ஒண்ணு தருவேன்" என்றார். மாணவர்கள் துள்ளிக்குதித்தபடி, அவருடைய வேளாண் கிடங்குக்குள் ஓடினார்கள்.

அத்தனைபேரும் உள்ளே இருந்த வைக்கோற்போர், புல், பூண்டு, இண்டு, இடுக்கு விடாமல் தேடியும் வாட்ச் கிடைக்கவில்லை. சோர்ந்துபோனவர்களாக வெளியே திரும்பிவந்தார்கள்.

விவசாயியிடம், "மன்னிச்சுக்கங்க ஐயா, எங்களால கண்டுபிடிக்க முடியலை" என்றான் அவர்களில் ஒருவன். அவருக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த நேரத்தில், தயங்கித் தயங்கி ஒரு சிறுவன் அவரருகே வந்தான்.

"ஐயா, எனக்கு மட்டும் இன்னொரு சான்ஸ் தர்றீங்களா? நான் அந்த வாட்ச் கிடைக்குதானு முயற்சி செஞ்சு பார்க்குறேன்" என்றான்.

அவர், அவ்வளவு நேரம் அந்தச் சிறுவர்கள் சிரத்தையோடு வாட்ச்சைத் தேடியதைப் பார்த்திருந்தார். இன்னொரு சான்ஸ் கேட்கிறான் இந்தச் சிறுவன். கொடுத்தால் என்ன குறைந்துவிடப் போகிறது? "சரி..." என்றார்.



கடிகாரம்

சிறுவன் கிடங்குக்குள் நுழைந்தான். கதவைச் சாத்திக்கொண்டான். அவன் உள்ளே நுழைந்து பதினைந்து நிமிடங்கள்தாம் ஆகியிருக்கும். கதவு திறக்கப்பட்டது. வெளியே வந்தான். அவன் கையில், காணாமல் போயிருந்த அவரின் வாட்ச் இருந்தது. அவருக்கு ஆச்சர்யமும் சந்தோஷமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது.

"தம்பி... நீ மட்டும் எப்படி சரியா வாட்ச்சைக் கண்டுபிடிச்சே?" என்று கேட்டார்.

"ஐயா... நான் உள்ளே போய் ஒண்ணுமே செய்யலை. கிடங்குக்கு நடுவுல கண்ணை மூடி உட்கார்ந்துகிட்டேன். அஞ்சு நிமிஷம் அப்படியே காத்திருந்தேன். அந்த அமைதியில கடிகாரத்தோட ஹடிக்...டிக்... டிக்...' சத்தம் கேட்டுச்சு. சத்தம் வந்த திசைக்குப் போனேன். கண்டுபிடிச்சேன். எடுத்துட்டு வந்துட்டேன்."


ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

அலங்கார உற்ஷவம்

17.05.2018 வியாழக்கிழமை முதல்

28.05.2017 (தேர்) திங்கள்கிழமை வரை

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09

Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany



அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

## கண்களின் பாதுகாப்பு பற்றிய.....

09 ம் பக்கத் தொடர்ச்சி



கரும் பச்சை நிறமுடைய கீரை வகைகள், மற்றும் பழவகைகளில் விட்டமின் A யுடன் ஒட்சினெதிரிகள் (Antioxidents) என்று சொல்லப்படுகின்ற விட்டமின் ஊஇ நு யும் இருப்பதால் மேலும் நல்லதெனலாம். இவை கட்டரக்ட், வயதாவதால் ஏற்படும் மக்கியுலர் பாதிப்பு (cataract and age-related macular degeneration) ஆகியவற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்டவை.

ஆனால் பெரும்பாலும் கண்ணாடி தேவைப்படும் நோய்களான தூரப்பார்வை, கிட்டப்பார்வை போன்றவை வராமல் தடுக்கவோ அல்லது குணமாக்கவோ எந்த விட்டமினும் உதவாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட நேரம் கணினி முன் இருப்பது கண்களுக்கு நல்லதல்ல என்பது முழுமையாக உண்மையல்ல. கணனித் திரையை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது கண்களைச் சோர்வடையச் செய்யும். சில பாதுகாப்புகளை எடுத்துக் கொண்டால் நீண்ட நேரம் கொப்பியூட்டர் பாவிப்பதால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. உதாரணமாக மேசையில் அல்லது அறையில் இருக்கும் ஒளிவிளக்கின் ஒளி கணனித் திரையில் பட்டுத் தெறித்து கண்ணில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

அத்துடன் நீண்ட நேரம் கணினி முன் இருக்க நேர்கையில், மணித்தியாலத்திற்கு ஒரு தடவையாவது திரையை உற்றுப் பார்பதைத் தவிர்த்து, பார்வையை சற்று நேரம் தூரப் பொருளுக்கு நகர்த்துவதன் மூலம் கண்ணுக்கான வேலைப்பளுவைத் தவிர்க்க முடியும்.

கணனித் திரையை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில் கண் இமைப்பது எம்மை அறியாது குறைகிறது. இதனால் கண்கள் வரட்சியடைந்து உறுத்தல் ஏற்படக் கூடும். இதைத் தடுப்பதற்கு நாமாக நினைவு கூர்ந்து அடிக்கடி கண்களை இமைக்க வேண்டும். இதனால் கண்கள் ஈரலிப்பாக இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.உடலுக்கு பயிற்சி கொடுப்பது போல கண்களுக்கும் பயிற்சி கொடுப்பதன் மூலம் கண்பார்வை குறைவதைத் தடுக்க முடியும் எனப் பலர் எண்ணுகிறார்கள். யோகா போன்றவற்றில் கண் பயிற்சியும் அடங்குகிறது. ஆனால் பயிற்சிகள் மூலம் கண் பார்வை குறைவதைத் தடுக்க முடியும் என்பதற்கு எந்தவிதமான விஞ்ஞான பூர்வ ஆதாரங்களும் கிடையாது.



இதன் அர்த்தம் பயிற்சிகளால் உடலுக்கு நன்மை இல்லை என்பதல்ல. யோகா முதலான உடற் பயிற்சிகள் அனைத்துமே உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன, குருதிச் சுற்றோட்டத்தை மேம்படுத்துகின்றன, தசைகளைப் பலப்படுத்துகின்றன, மூட்டு நோய்களைத் தடுக்கின்றன என்பது உண்மையே.

ஆனால் பெரும்பாலான கண் நோய்கள் கண்ணின் வடிவமைப்பு, அதைச் சுற்றியுள்ள உறுப்புகளின் நலத்திலேயே தங்கியிருக்கின்றன. எனவேதான் கண் நோய்களைத் தடுக்கவோ குணமாக்கவோ பயிற்சிகளை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை.

ஆனால் நீங்கள் புகைப்பவராயின் அதனை நிறுத்துவதன் மூலம் கண்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பலவற்றையும் தடுக்க முடியும். முக்கியமாக வயதாவதால் ஏற்படும் மக்கியுலர் சிதைவு நோயைத் தடுக்க முடியும்.

சன் கிளாசஸ் அணிவதும், தொப்பி அணிவதும் உதவும். பழவகைகள், மரக்கறிகள் ஆகியவற்றை அதிகரிப்பதும், கொழுப்பு உணவுகளை முக்கியமாக கொழுப்பு அமிலங்கள் சேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பதும் கண்களைக் காப்பாற்ற நிச்சயம் உதவும். நன்றி:ஹய் நலமா


தேர்த் திருவிழா
அதிரடி மலிவுவிற்பனை!
அனைத்து வகை ஆடைகளும்
மிகச் சிறந்த கழிவு விலையில்...

Jüchen [யூச்சின்]
ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயம்
03.06.2018
Hoch str 10b
41363 - Hochneukirch

Hamm
ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்
24.06.2018
Siegenbeck str.04-05
59071 Hamm

https://m.Facebook.com
kkl.textillenschmuck

K.K.L

Textilien Schmuck Haushaltsware

தேர்த் திருவிழா
அதிரடி மலிவுவிற்பனை!

டோட்மூண்ட் நகரில்...

ஒரு முறை வந்து பாருங்கள்
மனதுநிறைவாக ஆடைகளை
வாங்கிச் செல்லுங்லுங்கள்.





வீட்டுச் சமையல்
உபகரணங்கள்
கிறைண்டர், மிக்சி,
அனைத்திற்கும்
நாடுங்கள்

சேலைகளுக்கு பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.

Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610

# நல்லா இருந்த நாடும் நாலஞ்சு தலைவர்களும்







வெற்றி மைந்தன்
[ தமிழ்நாடு ]

ஒரு வீட்டுத் தலைவனே திருடனைக் கூப்பிட்டு 'என் வீட்ல கொள்ளையடிங்கப்பா' என சொன்னால் எப்படி இருக்கும் ? அப்படியே கொள்ளையடிக்க வருபவர்களுக்காய் வீட்டுக் கதவையும், யன்னலையும் திறந்து கொடுத்து, தட்டிக் கேட்கும் வீட்டிலுள்ளவர்களைத் தனியே அடைத்து வைத்தால் எப்படி இருக்கும் ? கூடவே கொள்ளையடித்துப் போனபிறகும் திருடனுடைய திறமையைப் பற்றி சிலாகித்தும், வீட்டிலுள்ளவர்களை 'உதவாக்கரைகள்' என்றும் திட்டினால் எப்படி இருக்கும் ?

எதுக்கு இந்த அதீத கற்பனைன்னு யோசிக்கிறீங்களா ? அப்படி என்றால் நீங்க தமிழக அரசியலுக்கு ரொம்ப தூரமா இருக்கீங்கள் என்று அர்த்தம். தமிழக அரசியலில் இன்றைக்கு இது தான் நடந்து கொண்டிருக்கிறது. சொந்தத் தமிழ் மக்களுக்கு எவையெல்லாம் அழிவை வரவைக்குமோ அதையெல்லாம் அனுமதிக்கிறது அரசு. எதெல்லாம் அவர்களுடைய நிம்மதியைக் கெடுக்குமோ அதற்கெல்லாம் சிவப்புக் கம்பளம் போட்டு வரவேற்கிறது. எதெல்லாம் அவர்களுடைய சாப்பாட்டுக்கு வேட்டு வைக்குமோ அதையெல்லாம் உற்சாகமாக அனுமதிக்கிறது.

தன் சொந்த வீட்டையே காலிசெய்து இதன் மூலம் அரசியல் தலைவர்கள் அடையக்கூடிய இலாபம் என்ன என்றால் வெறும் சுயநலச் சில்லறைகள் மட்டுமே. "கனவு காணுங்கள்" என அப்துல் கலாம் ஐயா சொன்னார். தமிழக மக்களுக்கு கனவுகள் மட்டுமே விதிக்கப்பட்டிருக்கிறது. கனவுகளோடு விழித்து, கலைந்த கனவு களோடு தூங்குவது தான் அவர்களுடைய வாடிக்கையாகிவிட்டது.

ஒரு அரசாங்கம் எதையெல்லாம் கொடுக்க வேண்டும் என பட்டியலிட்டால், அந்த பட்டியலை "எதையெல்லாம் தமிழக அரசு தரவில்லை" என்பதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆலிபாபா காணாமல் போனவுடன் நாற்பது திருடர்கள் சட்டென நாற்பது குழுக்களாக உருவானது போல ஒரு சர்வ குழப்ப மயம் தமிழகத்தில் நிலவுகிறது.

'எப்ப வருவேன் எப்படி வருவேன்னு தெரியாது, ஆனா வரவேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்' என்று கால்நூற்றாண்டு காலமாய் சினிமா விளம்பரம் கொடுத்துக் கொண்டிருந்தவர் கடைசியில் களமிறங்கினார். அதாவது, களமிறக்கப்பட்டார்.

அவரும் தன் பங்குக்கு மாதம் ஒரு முறை மணிரத்னம் படம் போல நாலு வார்த்தை பேசிவிட்டு மலையேறிவிடுகிறார். அந்த வார்த்தையை வைத்துக் கொண்டு சமூக வலைத்தளங்களில் ரசிகக் குஞ்சுகள் சிலாகித்துத் திரிகின்றனர்.

இன்னும் எத்தனை நூற்றாண்டு முக்கி மோதினாலும் எச் ராஜாக்களையும், தமிழிசைகளையும் வைத்துக் கொண்டு தமிழகத்தில் கலகலப்பை உருவாக்கலாமே தவிர ஒரு சலசலப்பை உருவாக்க முடியாது என்பதை அமித்ஷா அரசு புரிந்து கொண்டு விட்டது. அதனால் தான் அவர்கள் ரஜினியை விடாமல் துரத்திக் கொண்டே இருந்தார்கள். பணத்துக்கு பஞ்சமில்லை, எல்லா தொழிலதிபர்களுக்கும் தேவையான அளவு வங்கியைத் துடைத்து கொடுத்தாயிற்று. கேம்பிரிட்ஜ் அனாலிடா மூலம் சீனா தெருவைக் காட்டி குஜராத் மாடலை உருவாக்கியாயிற்று. இனி ரஜினியை முன்னிறுத்தி கேம்பிரிட்ஜ் அனாலிடிகாவின் உளவியல் விளையாட்டை ஆரம்பிக்க வேண்டியது தான்.

அதற்காகத் தான் 'ஆன்மீக அரசியல்' எனும் போர்வையில் ரஜினி களத்தில் தள்ளப்பட்டார். தேர்தல் காலத்தில் ஆர்.எஸ்.எஸ், பாஜக, அதோடு இணையக்கூடிய சில அல்லறை சில்லறை கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஆன்மீக அரசியலோடு கைகோர்த்து வாக்கு வங்கியை உருவாக்க முயலும். எனினும் திமுக எனும் ஆலமரத்துக்கு ஈடு கொடுக்க நிச்சயம் முடியாது. தமிழகத்தில் திராவிட இயக்கங்களின் ஆதிக்கத்தை குறைந்த பட்சம் அசைக்க வேண்டுமெனில் திமுகவின் வாக்கு வங்கியை அசைத்தே ஆகவேண்டும்.

அதற்காகக் களமிறக்கப்பட்டவர் தான் உலக நாயகன். அப்படியே அச்சு அசலாக திமுகவின் கொள்கைகளோடு, அப்படியே மக்கள் நல சிந்தனைகளோடு, ஆனால் அரசியலில் இதுவரை நுழையாத புனிதவானாக உலக நாயகன் களத்தில் குதித்தார். எதையும் அறிவுசார்ந்து பேசவும், எந்த கேள்வியையும் தனக்கேற்றாற்போல வளைத்துக் கொள்ளவும் கமலால் முடியும். அதனால் அவரது ரசிகர்களைத் தாண்டி, ஒரு தூய்மையான அரசியல் வேண்டும் என நினைப்பவர்களெல்லாம் கமல் பக்கம் வீழுந்து விடுகின்றனர். உண்மையில் கமலின் நோக்கம், திமுகவை உடைப்பது என்பதைத் தவிர வேறெதுவாகவும் இருக்க வாய்ப்பில்லை.

திராவிடம் எனும் சிந்தனையைக் கொண்டிராத கட்சிகளைப் பற்றி பாஜக வுக்குக் கவலையில்லை. அவர்களை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் சாய்க்கலாம். அல்லது எப்படி வேண்டுமானாலும் உடைக்கலாம். அதனால் தான் நான் தமிழர் போன்ற கட்சிகளை பாஜக கண்டு கொள்வதில்லை. சீமானின் உணர்ச்சிப் பேச்சுகளும், ஈழக் கதைகளும் திராவிட இயக்க வாக்குகளைச் சிதறடிக்கட்டும், அது தனக்கு லாபமே என கூட்டல் கழித்தல் கணக்கைத் தான் பாஜக போடுகிறது. அதை புரிந்து கொண்ட திமுக, வைகோ மூலமாக சீமானின் ஈழக் கதைகளை அம்பலப்படுத்தத் துவங்கியிருப்பது தனிக்கதை.

தமிழக அரசியலின் நிழலாக பாஜக இருப்பதாகச் சொல்பவர்கள் அறிவிலிகள். உண்மையில் பாஜக தான் தமிழக அரசியலில் நிஜமாக இருக்கிறது. அதிமுக நிழலாகக் கூட இல்லை. பாஜகவின் பொம்மலாட்ட அசைவுகளுக்கேற்ப பேசுகிறது, நிற்கிறது, நடக்கிறது. ஒரு வார்த்தை அதிகமாகப் பேசிவிட்டால் உடனடியாக டெல்லிக்கு ஓடி நேரடியாக மன்னிப்பு மண்டியிடலை நிகழ்த்துகிறது.

சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆண்ட மண் இன்று மாற்றானின் அரசவையில் மண்டியிட்டுக் கிடக்கிறது. தேர்க்காலில் கன்றை நசுக்கிக் கொன்ற நேர்மையின் பரம்பரை இன்று தேர்க்காலை நக்கிக் கொண்டிருக்கிறது. தவறிழைத்துவிட்டேன் என பாண்டிய மன்னன் இருக்கையிலேயே உயிரை விட்டான். இன்றைய அரசோ இருக்கையில் இருக்கிறது, மக்கள் உயிரை விடுகிறார்கள்.

தொடர்ச்சி 14 ம் பக்கம்


உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF FES இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



APIRAAMI ENTERPRISE

அபிராமி என்ரப்பிறைஸ்
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
துரித பண மாற்றுச் சேவை!
Ria
VALUTRANS MONEY TRANSFER
Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925



மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம்
(Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen

13ம் பக்க தொடர்ச்சி....

## நல்லா இருந்த நாடும் நாலஞ்சு தலைவர்களும்

தனது நாட்டின் வளம் கொள்ளை போவதை அறிந்தும் எதிர்த்து ஒரு குரல் கூட கொடுக்காத அரசை என்னென்பது ? முதுகெலும்பற்ற அரசு என்பதா ? அல்லது குரைக்க மறந்து போன காவல் நாய் என்பதா ? விவசாயிகள் ஆயிரக்கணக்கில் இறக்கிறார்கள் என்பதை அறிந்தும் பதைத்துப் போகாத, அவர்களுடைய பரிதவிப்பைப் போக்காத அரசை என்னவென்பது ? கல்நெஞ்ச அரசென்பதா ? கையாலாகாத அரசென்பதா ? ஸ்டெர்லைட் ஆலையின் மூலமும், மீத்தேன் மூலமும் இயற்கையை சிதைத்து, மனிதர்களை நோயாளிகளாக்கும் அரசை என்னென்பது ? கொலைகார அரசென்பதா ? அசுரர் அரசென்பதா ?

உண்மையில் இதை அரசு என்பதே அவமானம் ! வளர்ச்சியிலும், பட்டியலிலும் எங்கோ இருந்த மாநிலங்களெல்லாம் கம்பீரமாக முதலிடங்களை நோக்கி முன்னேறி விட்டன. முதலிடங்களில் இருந்த தமிழகம் எங்கோ கண் காணாத தூரத்துக்குச் சென்று விட்டது. வளர்ச்சித் திட்டங்கள் கிலோ என்ன விலை என்பதே இன்றைய அரசின் கேள்வியாய் இருக்கிறது.

ஒரு அரசு, மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கவேண்டும். இன்றைய தமிழக அரசு அத்தகைய பாதுகாப்பை வழங்கவில்லை. தமிழுக்கு எதிராகவும், தமிழருக்கு எதிராகவும் சமீபகாலமாக குரல்கள் வெகு தைரியமாக, சமூக வெளியில் எழுகின்றன. தமிழனின் தன்மானத்தை, தமிழன் உயிராய் நினைக்கும் தலைவர்களை அவமானப்படுத்தும் பேச்சுகள் சர்வ சுதந்திரமாக உலவுகின்றன. அவற்றுக்கு எதிராகப் பொங்கும் தமிழர்களை அரசு ஒடுக்குகிறது. தமிழையும் தமிழரையும் அவமானப்படுத்துபவர்களை அது கண்டுகொள்வதேயில்லை. அரசு தரவேண்டிய முதல் விஷயமான பாதுகாப்பு பலமாக இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

அரசு தரவேண்டிய இரண்டாவது விஷயம் வாழ்வாதார விஷயங்கள். தமிழர்களின் வாழ்வுக்கான விவசாயமானாலும் சரி, அவனுடைய கல்வி உரிமைகளானாலும் சரி, அவனுடைய மருத்துவம் சுகாதாரம் போன்றவையானாலும் சரி. எதையுமே அரசு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதே கண்கூடு. பாதுகாப்பை வழங்காத அரசு, வாழ்க்கையையும் வழங்கவில்லை ! மேலிருந்து ஆட்டுவித்தால் வார்த்தைகளை வீசுகிறார்கள். அல்லது போட்டி போட்டுக்கொண்டு சூரியனுக்குக் குடைபிடித்து தங்களுடைய விஞ்ஞான ஆர்வத்தை சந்தி சிரிக்க வைக்கிறார்கள்.

மூன்றாவதாக, அரசு நீண்டகால திட்டங்களை உருவாக்க வேண்டும். வேலைவாய்ப்பு, இளைஞர்களை ஈடுபடுத்தும் ஆக்கப்பூர்வப் பணிகள், நாட்டின் கட்டமைப்பு போன்ற பல விஷயங்களைச் செய்ய வேண்டும். அடிப்படையான விஷயங்களே இங்கே கேள்விக்குறியாய் இருக்கும் போது, மற்ற விஷயங்கள் நடைபெற்று வியப்புக் குறியை நமக்குத் தரப்போவதில்லை. திட்டம் எனும் ஒன்றே இன்றைக்கு இல்லை என்பது தான் யதார்த்தம்.

இந்திய தேசம் வரலாற்றுத் தனைகுனிவை நோக்கி நகர்கிறது. தமிழகம் மிகப்பெரிய தன்மானத் தலைகுனிவை நோக்கி நகர்கிறது. தமிழ் என்றாலும் தமிழன் என்றாலும் இனிமேல் வரலாற்றுப் புகழ் மட்டும் தானே எனும் அச்சமும் உருவாகிறது. அப்படி இல்லை, தமிழ் என்பது உயிரில் கலந்த உணர்வு. தமிழ் உணர்வு என்பது அணுக்களை விட்டு அகலாத அம்சம் என்பதை நிரூபிக்கும் விதமாகத் தான் ஜல்லிக்கட்டு போராட்டம் போன்ற



நிகழ்வுகளும், காவிரிப் போராட்டங்களும், சர்வதேச தமிழினத்தின் ஆதரவுக் குரல்களும் உருவாகின்றன !

எவ்வளவோ சுயநலச் சுருக்குகள் விழுந்தாலும், எத்தனையோ சதுரங்கக் காய்கள் நகர்த்தப்பட்டாலும் தமிழ் வாழும். முள்ளிடையே விதைக்கப்பட்ட விதை, ஆலமரமாகும் போது முட்களை உடைத்து எறிவது போல வாழும். தமிழ் இன்று ஒரு நிலப்பரப்புக்குள் அடைபடவில்லை. சர்வதேசம் முழுவதும் அது விரிந்து பரந்திருக்கிறது. தமிழ் என்பது சர்வதேச சமூகம். எங்கே பொழிந்தாலும் மழை ஈரமாகவே விழும். எங்கே எழுந்தாலும் தமிழ் வீரமாகவே எழும். இன்னும் தமிழின் இலக்கண இலக்கியங்களை மீறும் ஒரு மொழி உருவாகவில்லை. இன்னும் தமிழின் இலக்கியச் செழுமைகளை தாண்டிய இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. ஒற்றைத் திருக்குறளுக்கு மேலாய் எந்த ஒரு ஆன்மீகம் சாரா இலக்கியங்களும் எழுதப்படவில்லை.



எத்தனை தான் மறைத்து வைத்தாலும் கீழடி போன்ற ஆய்வுகள் உலகின் மூத்தகுடி தமிழ் என்பதற்கான ஆதாரங்களை அள்ளிக் கொட்டுகிறது. சிறு கல்லை மறைத்து வைக்கலாம், எரிமலையை மறைத்து வைக்க முடியாது. குவளைத் தண்ணீரை மறைத்து வைக்கலாம், பெருமழையை மறைத்து வைக்க முடியாது. தமிழ் எத்தனை இன்னல்களையும் தாங்கி வளரும்.

தலைவர்கள் வருவார்கள் போவார்கள், தமிழ் நிலைக்கும் !எத்தனை பேர் அழிக்க நினைத்தாலும், அவர்களை உண்டு வாழும் நெருப்பைப் போல !வீழ்த்த நினைப்போரை வீழ்த்தி, தமிழ் வாழும் ! தமிழ் ஆளும் !



# இராவணனின் பத்து தலைகள் அவனுடைய பத்து சிறந்த குணங்களை குறிப்பதாம்!!!

தனசேகர் பிரபாகரன்



இராவணன் மேலது நீறு

ஞானப்பால் அருந்திய சீர்காழிப்பிள்ளை யாத்த தீந்தமிழ் தேவாரம் இவ்வாறு உரைக்கிறது "இராவணன் மேலது நீறு", சைவர்கள் நித்தம் தம் நெற்றியில் பூசி வழிபடும் திருநீற்றைப் போற்றி சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் தான் இந்த வரி வருகிறது. இராவணன் பொதுவாக அரக்கனாக சித்தரிக்கப் பட்டாலும் மிகச்சிறந்த சிவனருட்செல்வனாகவும் எண்ணற்ற நல்ல குணங்களை கொண்டு விளங்கினான் என்பதை மறுப்பதற்கில்லை.

பரமேஸ்வரனுக்கு இணையாக ஈஸ்வரன் எனும் பட்டம் கொண்டு இராவணேஸ்வரன் என்றும் இலங்கேஸ்வரன் என்று அறியப்படுகிறான். பொதுவாக தசகண்டன், பத்துதலை கொண்ட அரக்கன் என்று சொல்லப்பட்டாலும், இராவணனின் பத்து தலைகள் அவனுடைய பத்து சிறந்த குணங்களை குறிப்பதாகவும், இலங்கையை பத்தாக பிரித்து முடிசூடி ஆண்டமையால் பத்துதலைகள் என்றும், எட்டுத்திசைகளோடு மேலும் கீழுமென பத்து திசைகளை வென்றவனாதலின் பத்துதலைகள் கொண்ட இராவணன் எனப்பட்டான் என்ற கருத்துக்களும் உண்டு.

சங்கரன் கொடுத்த வாளும், யானை தந்தங்கள் புகாத மார்பும், நாரத முனிவர்களுக்கு இணையாகக் கல்வி பேசும் நாவும், சாம வேத பாண்டித்தியமும் இராவணனின் அணிகலன்கள்.

இன்றைக்கும் தமிழகத்திலும் ஈழத்திலும் சிவாலயங்களில் கைலாச பர்வத வாகனத்தில் இராவணன் உருவம் அமைக்கப்படுவது வழக்கம், சிலவிடங்களில் தனி இராவண வாகனம் கூட உண்டு, சிவன் இராவணனுக்கு அருளும் இராவண அனுகிரஹ மூர்த்தி சிவவடிவங்களுள் ஒன்று.

தன் நரம்புகளையே தந்திகளாக்கி இசைபாடி சிவபெருமானை துதித்தவனாதலால் வீணையில் தேர்ந்தவனென்றும் அந்த வீணையை தம்கொடியில் கொண்டதால் வீணைக்கொடியுடைய வேந்தனென்றும் விளிக்கப்பெறுகிறான். இதனால் இசைக்கலையில் பெரும்புலமையை இராவணேஸ்வரன் பெற்றிருந்தான் என்பது நன்கு புலப்படும்.

இலங்கையை இராவணன் சீரோடும் சிறப்போடும் ஆட்சிசெய்ததாக பலவிடங்களில் கம்பர் சுட்டுகிறார், இராமன் வாயிலாக கம்பர் சொல்லும் இலங்கையின் பெருமை

"இந்திரன் இருக்கை என்பர் இலங்கையை எடுத்துக் காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார் அருங் கவிப் புலவர் அம்மா!"

புலவர்கள் இலங்கையின் சிறப்பை அறிந்திருந்தால் உவமைக்கு தேவர்களின் அமராவதியை விட்டுவிட்டு இலங்கையையே எடுத்துக்காட்டாக கூறுவார் என்று இராமன் இலக்குவனும் சொல்லும் வரிகள்.

தேவர்கள் கூட இலங்கைக்கு வந்து தமக்கு ஏவல் பணிசெய்யும் அளவு தவ வலிமை கொண்ட வீரன் இராவணன் என்று அனுமன் நினைத்ததாய் கம்பர் சொல்லுவார். "மூன்று கோடி வாணாளும் , முயன்று பெற்ற பெரிய தவமும், முதல்வனால் முன்னாளில் எக்கோடி யாராலும் வெல்லப்படாய் என்று கொடுக்கப்பட்ட வரமும் , உலகனைத்தையும் செருக்கடந்த புயவலியும் " என இராவணனது பெருமையைக் கம்பநாடன் வியந்து எழுதுகிறார்.

முழுக்க நல்லவர்களும் இல்லை கெட்டவர்களும் இல்லை, இப்படி நல்ல பண்புகள் இருந்தும் விதி வசித்தாலும், தங்கையின் பேச்சாலும், இராவணன் வீழ்ந்திருக்க கூடும். தம்பியர் மீது பாசமும், உற்ற மனைவியாம் மண்டோதரி மீது அன்பும் கொண்டவனாக இராவணன் இருந்திருக்கிறான், இராமகதைகளின் பலவடிவங்கள் பாரதத்திலும் இலங்கையிலும் கடல்கடந்து கீழ்த்திசை நாடுகளிலும் காணக்கிடக்கின்றன, சில வடிவங்களில் தங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தால் தான் சீதையை இராவணன் சிறையெடுத்தான் என்றும் சீதை மீது கொண்ட ஆசையால் அல்லவென்றும் கூட சொல்லப்படுகிறது.

இராவணனை பாட்டுடைத்தலைவனாக வைத்து இராவண காவியம் கூட எழுந்தது, ஒருவரிடத்து உள்ள நல்ல பண்புகளை சீர்தூக்கி பார்த்து போற்றுதல் நம் கடமையாகும், பலவாண்டுகட்கு முன்பே வாழ்ந்த சம்பந்தர் முதலானோர் இராவணனை பலவிடத்தும் தம் பாடல்களில் குறித்து போற்றியது அவனுடைய நற்பண்புகளை உலகத்தோர் உணரச்செய்யும் பொருட்டே ஆகும் என்பதற்காகவே.

இராமன் பெயர் நிலைப்பது போல யாண்டும் இராவணன் பெயரும் நிலைக்கும் அவனது நற்பண்புகளும் பேசப்படும்.



இராவணன் விமானம்




பத்து தலைகள்:

பல. ஓவியங்களில் இராவணன் பத்துத் தலைகளை உடையவனாக சித்தரிக்கப்படுகின்றார். இராவணனுடைய ஆட்சியின் போது இலங்கை வளமாகக் காணப்பட்டதாகவும், இராவணன் விமானம் ஒன்றை வைத்திருந்ததாக இராமாயணம் கூறுகின்றது. வாரியபொல - "வானோடும் கலம் இறங்குமிடம்" போன்ற ஊர் பெயர்களும் இலங்கையில் உண்டு என்பது இங்கு குறிக்கத்தக்கது. இராவணன் பிராமணராகவும், சிவபக்தி மிகுந்தவனாகவும் சித்தரிக்கப்படுகின்றார். அதேவேளை, அவன் ஒரு அசுரனாகவும், அசுரர்களின் அரசனாகவும் சித்தரிக்கப்படுகின்றான். இராவணன் பற்றிய நோக்குகள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேறுபட்டு காணப்படுகின்றன.



# யேர்மனிக்கே அல்வா கொடுத்த யேர்மனியர்!



**சேவியர்.**

தமிழகத்தில் திருநெல்வேலி அல்வாவிற்கு பெயர் பெற்றது. அவர்களுக்கே அல்வா கொடுத்தால் எப்படி? திருநெல் வேலிக்கே அல்வாவா என்பது பிரபலமாகிவிட்டது.

சிலர் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அல்வா கொடுப்பார்கள். சிலர் தான் சர்வதேச அளவில் அல்வா கொடுத்து அப்பாவியாய் நடமாடுவார்கள். அப்படி உலகத்தையே முட்டாளாக்கிய சிலருடைய திறமையைப் பார்ப்போம்.

## உலகுக்கு அல்வா கொடுத்தவர்கள்!

யேர்மனிக்கே அல்வா கொடுத்தவர்!

### ஹிட்லரின் டைரி





கோன்ராட் ஹுஜா என்பவரிடம் இருந்தது குட்டிக் குட்டியாய் 60 புத்தகங்கள். இந்தப் புத்தகங்களை தன் கைப்பட எழுதியது சாட்சாத் அந்த ஹிட்லரே தான் ! என்றார் கோன்ராட். ஆஹா வந்தாள் மகாலக்ஷ்மி என, இந்த புத்தகங்களை 6 மில்லியன் டாலர்கள் அள்ளிக் கொடுத்து வாங்கியது "டெர் ஸ்டெயின்" எனும் ஜெர்மன் பத்திரிகை.
"இந்த நூற்றாண்டின் மாபெரும் கண்டுபிடிப்பு" இது என 1983 ஏப்ரல் 22ம் நாள், அந்த நாளிதழ் குதூகலத்துடன் செய்தியையும் வெளியிட்டது.
இரண்டே வாரங்கள் தான் ! மேட்டரைப் படித்தவர்களுக்கு சந்தேகம் வர, நூல்களை பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்கள். அப்போது தான் தெரிந்தது கோன்ராட் கொடுத்த ஆறு மில்லியன் டாலர் அல்வா ! நவீன காகிதத்தில், லேட்டஸ்ட் பேனா கொண்டு, தப்புத் தப்பாக எழுதிய புத்தகத்தை உண்மையென்று நம்பிய "ரொம்ப நல்லவரான" டெர் ஸ்டெயின் பத்திரிகை டெரர் ஆனது. அப்புறம் என்ன ? கில்லாடி கோன்ராட் 42 மாதம் ஜெயிலுக்குப் போகவேண்டியதாயிற்று !

### கடலில் ஒரு பிரம்மாண்டம்

1934ம் ஆண்டு ஸ்காட்லாந்து பகுதியிலுள்ள லாச் நிஸ் எனும் ஏரியில் ஒரு மாபெரும் உருவம் தலையை நீட்டிக் கொண்டு நீந்தியது. ராபர்ட் வில்சன் எனும் மரியாதைக்குரிய ராணுவ வீரர் அதைக் கிளிக்கினார்.

அந்தப் படத்தின் உபயத்தில் ராபர்ட் ஒரே நாளில் உலக நாயகன் ஆனார். இந்த உருவத்துக்கு என்ன பெயர் கொடுப்பது என்று குழம்பியவர்கள் கடைசியில் "சார்ஜன்ஸ் போட்டோ" என்றே பெயரிட்டார்கள்.
உலகெங்கும் பரபரப்பைப் பற்ற வைத்த இந்த போட்டோவை நம்பி பலர் ஆராய்ச்சியில் குதித்தனர். திரைப்படங்கள் எடுத்தனர், நூல்கள் எழுதித் தள்ளினர். இது ராபர்ட் வில்சன் உலகுக்குக் கொடுத்த ஒரு ராட்சத அல்வா என்பது 60 வருடங்கள் வரை யாருக்கும் தெரியவில்லை.

1994ல் மரணப் படுக்கையில் முனகிக் கொண்டிருந்த 90 வயதான கிறிஸ்டியன் ஸ்பர்லிங் என்பவர் தான் இது ஒரு டுபாக்கூர் போட்டோ என்பதைப் போட்டு உடைத்தார். தானும் வில்சனும் சேர்ந்து இந்த தில்லாலங்கடி வேலையைச் செய்ததாக மரண வாக்கு மூலம் கொடுத்தார் அவர்.

வில்சனுக்கு "பிரம்மாண்டங்களின் மீது பிரியம் அதிகம். ஒரு முறை ஒரு ராட்சத மனிதனின் காலடித் தடத்தைக் கண்டு பிடித்தேன் என உற்சாகமாய் குதித்திருக்கிறார். வந்து பார்த்தவர்கள், தூ... இது நீரயானையோட காலடிப்பா என நக்கலடித்தார்களாம். அந்த கடுப்பில் எல்லாரையும் முட்டாளாக்க நினைத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் இந்த வில்சன் !.

### ஏலியன் போஸ்ட்மார்ட்டம்

1947ல் அமெரிக்காவிலுள்ள நியூ மெக்ஸிகோவில், ரோஸ்வெல் என்னுமிடத்தில் உடைந்து விழுந்தது ஒரு பறக்கும் தட்டு. அங்கே பல வித்தியாசமான பொருட்கள் கிடைத்தன, வேற்றுக்கிரக வாசிகளின் உடல்கள் கிடைத்தன என்றெல்லாம் பரபரப்பு கிளம்பியது. சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு 1995ல் ரே சாண்டிலி என்பவர் ஒரு டாக்குமெண்டரியை வெளியிட்டார். 1947ல் கிடைத்த ஒரு ஏலியனின் போஸ்ட்மார்ட்டம் இது என ஒரு ஏலியனைக் காட்டினார்.
உலகெங்கும் சரசரவென தகவல் பரவ "ரே" ஒரே நாளில் உலகப் புகழ் பெற்றார். ஆனால் பாவம் அது நீடிக்கவில்லை. 1947ல் எடுத்த படம் என அவர் காட்டிய வீடியோவின் பின்னணியில் 1967க்குப் பிறகு வந்த சில விஷயங்கள் தெரிய ரே மாட்டிக் கொண்டார். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலை கணக்கா, இது ஒரிஜினலோட டூப்ளிகேட். ஆனா ஒரிஜினலை நான் பாத்திருக்கேன் என இன்னொரு அல்வாவுக்குத் தயாரானார்.

## 12ம் ஆண்டு நினைவு அஞ்சலி



திதி 26.04.2018

தோற்றம்
25.09-1942

மறைவு:
09.05.2006

**திருமதி ஞானேஸ்வரி.சிவஞானசுந்தரம்**

பன்னீரண்டு ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்.சு.சிவஞானசுந்தரம் யேர்மனி டோட்மூண்ட் Handy: 0176 69 366 433


Chilli Mixx Catering

உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158

தொடர்ச்சி 15 ம் பக்கம்

# உலகுக்கு அல்வா கொடுத்தவர்கள்!





பீஜீ கடல்கன்னி

## பில்ட்டவும் மண்டை ஓடு !

1912ல் கண்டு பிடிக்கப்பட்ட பில்ட்டவுன் மனிதனின் மண்டை ஓடு உலகப் புகழ் பெற்றது. இங்கிலாந்திலுள்ள பில்ட்டவும் எனுமிடத்தில் கிடைத்ததால் இதற்கு இந்த பெயர் வந்தது. இது ஆதி மனிதனுடைய எலும்புக் கூடு என சிலாகித்தனர் பலர் . குரங்கிலிருந்து மனிதன் எப்படி பரிணாம வளர்ச்சியடைந்தான் என்பதை அறிய உலகிற்குக் கிடைத்த மாபெரும் வாய்ப்பு என கொண்டாடினார்கள்.

நாற்பது வருடங்கள் வரை இது ஒரு அல்வா ஓடு என்பது யாருக்கும் தெரியவில்லை. 1953ல் விஷயம் வெளியே வர அப்செட் ஆகிப் போனது கூட்டம். இந்த மண்டையோட்டின் மேல் பாகம் சுமார் 500 வருடங்களுக்கு முந்தைய மனிதனுடையது. கீழ்த் தாடை ஒராங்குட்டான் எனும் மனிதக்குரங்கினுடையது. இரண்டையும் சாமர்த்தியமாக இணைத்து ஒரு மண்டை ஓடை உண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி செம பிரில்லியண்டாக உலகுக்கே அல்வா கொடுத்தவன் யார் என்பது மட்டும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை !

## பீஜீ கடல்கன்னி

பி.டி பர்னம் என்பவருடைய சர்க்கஸ் சட்டென உலகப் புகழ் பெற்றது. காரணம் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பீஜீ கடல்கன்னியின் உடல். வால்ப்பாகம் மீன், தலைப்பாகம் மனிதனைப் போன்ற உடல் என திகிலாய் இருந்தது உருவம். மோசஸ் கிம்பல் என்பவரிடம் அகப்பட்ட இந்த கடல்கன்னியை வாரம் 12.5 டாலர்கள் எனும் கணக்கில் வாடகைக்கு வாங்கியிருந்தார் பி.டி.பர்னம்.

ரொம்ப காலத்துக்கு அப்புறம் தான் தெரிந்தது இது ஒரு பலே மோசடி என்பது !. உண்மையில் இதன் வால்பகுதி ஒரு பெரிய மீனுடையது. கழுத்து மற்றும் உடல் ஒரங்கொட்டான் எனும் மனிதக் குரங்கிற்குச் சொந்தமானது. தலை ஒரு குரங்கினுடையது. இப்படி மூன்றையும் சேர்த்துக் கட்டி காசு பார்த்திருக்கிறார் கில்லாடி கிம்பல் ! அப்புறமென்ன அல்வா சாப்பிட்டவர்கள் வாயைத் துடைத்துக் கொண்டார்கள். !

## நெப்போலியனுக்கே அல்வா

ஆஸ்திரியாவிலுள்ள ஷோன்பர்ன் அரண்மனையில் 1970ல் "தடுர்க்" காட்சிக்கு வந்தபோது எல்லோரும் வியந்து போனார்கள். உலகின் முதல் "செஸ் விளையாடும் மெஷின்" இது. "தைரியம் இருந்தால் எனது மெஷினுடன் விளையாடி ஜெயிக்கலாம்" என சாவால் விட்டார் இதை உருவாக்கிய கெம்ப்லீனின். பலர் விளையாட வந்தார்கள். தோற்றுப் போனார்கள். இந்த தோற்றுப் போனவர்கள் பட்டியலில் ஆளானப்பட்ட நெப்போலியன், பெஞ்சமின் பிராங்கிளின் எல்லாம் அடக்கம்.


ஒரு மேஜை போன்ற இந்த மிஷினின் ஒரு பொம்மை உட்கார்ந்திருக்கும். அது தான் காய்களை நகர்த்தும். விளையாட ஆரம்பிக்கும் முன் மேஜையின் கதவுகளையெல்லாம் பார்வையாளர்களுக்குத் திறந்து காட்டுவார் கெம்ப்லீன். உள்ளே யாரும் இல்லை என உறுதிப்படுத்த ! ரொம்ப வருஷத்துக்கு




அப்புறம் தான் தெரிந்தது உள்ளே ஒரு செஸ் கில்லாடி உட்கார்ந்து "விளையாடிய" சமாச்சாரம். பலர் சந்தேகப்பட்டாலும் சுமார் 84 ஆண்டு காலம் உலகை முட்டாளாக்கியது இந்த டுர்க்.









1854ல் தீப்பிடித்ததில் டுர்க்கும் சமாதியாகிவிட்டது. இதைக் கடைசியாக வைத்திருந்த டாக்டர் சிலாஸ் மிச்செல் தான் இதன் நுட்பங்களை விளக்கி உலகை வியக்க வைத்தார் ! நெப்போலியனுக்கே அல்வா கொடுத்த கெம்பலீனை பாராட்டாமல் இருக்க முடியுமா ?

## கோ ஆஸ்க் அலீஸ் GO ASK ALICE

இந்தப் புத்தகம் வெளியானபோது மிகப்பெரிய பரபரப்பு எல்லோரையும் தொற்றிக் கொண்டது. விழுந்தடித்துக் கொண்டு மக்கள் இந்த புத்தகத்தை வாங்கி வாசித்தார்கள். வாசித்தவர்களெல்லாம் உச்சு கொட்டினார்கள். காரணம் இல்லாமல் இல்லை. இந்த நூல் போதைக்கும், பாலியலுக்கும், மன அழுத்தத்துக்கும் அடிமையான ஒரு பதின் வயதுப் பெண்ணின் கதை. வாழ்க்கையின் வலிகளைச் சுமந்த அந்த பெண் கடைசியில் அளவுக்கு அதிகமான போதையைச் சாப்பிட நிர்ப்பந்திக்கப்பட்டு இறந்து போனாள் என்பதே கதை.

உண்மைக் கதை எனும் பெயரில் வெளியானதால் இது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. 1971ம் ஆண்டு வெளியான இந்த நூல் உண்மை என்றே எல்லோரும் நம்பினார்கள். ஆனால் இது ஒரு டுபாக்கூர் நாவல் என்பதும், இதை எழுதியவரின் கற்பனையில் உதித்தது என்பதும் பல ஆண்டுகளுக்குப் பின்பு தான் தெரிய வந்தது.

ஸ்பார்க்ஸ் என்பவர் தொகுத்ததாகச் சொல்லப்பட்ட இந்த நூல், பின்னர் அவரே எழுதியதாக மாறிப் போனது. பள்ளிக்கூடங்களிலெல்லாம் இந்த நூல் தடை விதிக்கப்பட்டது. இப்போது, "இது ஒரு கற்பனைக் கதை" எனும் அடைமொழியுடன் தான் வெளியாகிறது இந்த உலகை ஏமாற்றிய நூல்.








BTM
JACK MACKEREL
IN NATURAL JUICE WITH SALT ADDED
Maquereau Dans le jus naturel avec du sel ajouté
Jack Makrelen In Natürlichem Saft mit Salz,
der hinzugefügt wird
BTM
Rich in Omega 3
Taste of the Paradise
JACK MACKEREL
BTM
JACK MACKEREL
BTM
Mackerel in brine
Mackerel in tomato sauce
BTM International UK Ltd
80 Goodhall Street ,Park Royal, London NW10 6TS
United Kingdom.
www. btmint. com
Email: info@btmint.com
நமது தயாரிப்புக்கள் தற்போது யேர்மனியில் கிடைக்கும்
Aachi Products Now Available in
GERMANY
Aachi
The Mother of Good Taste
CHICKEN CURRY MASALA
Aachi
CHICKEN CURRY
MASALA
Mélange d'épices pour poulet
பாரம்பரிய சுவையின் இருப்பிடம்
Bring home an Indian Traditional Taste and Quality Blended Spices
More than 200 products specially and Carefully blended just to spice up your life!
CHICKEN 65 MASALA
MUTTON CURRY MASALA
FISH CURRY MASALA
FISH FRY MASALA
CHILLI CHICKEN MASALA
PEPPER CHICKEN MASALA
KOSHER
SGS
For Trade Enquiries:
exports@aachigroup.com
Distributed by: BTM INTERNATIONAL UK.LTD
80, Goodhall Street, Park Royal, London, NW10 6TS
Tel: 02089611555 | 02089615522 | Email: info@btmint.com | www.btmint.co.uk
as products are available in Star impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
Star Impex
Asia & Afro Großhandel / Einzelhandel
Kipper Str.03 44147 Dortmund Germany
Tel: 0231 860 26 96
e.mail:star-impex@live.de

# பெண்களின் அலங்காரத்தை இரசிப்பது ஆண்களா! இல்லைப் பெண்களா?



ரஜினா தருமராஜா







பெண்களின் அலங்காரத்தை இரசிப்பது ஆண்களும் பெண்களும்! என்ன நண்பர்களே நான் கூறுவது சரியா தவறா?

பிறந்த பெண்பிள்ளையை அலங்காரத்துடன் அழகுசெய்து இரசிப்பவர்கள் யார்? தாயும் தந்தையும் அல்லவா! பெண்பிள்ளை பிறந்தால் அலங்கரிக்கலாம் என்று அனைவரும் நினைப்பதுண்டு. இவர்களைவிட யாரால் இரசிக்கமுடியும்?

தாய் என்பவர் அலங்காரம் செய்துவிடுபவரல்லவா. இரசித்துக்கொண்டு தன் மகளுக்கு அலங்காரம் செய்வார். தாயைவிட வேறுயாரால் ஒரு பெண்ணை இரசிக்க முடியும்?

பிறந்ததிலிருந்து திருமணம் ஆகும்வரை மற்றும் ஆனபின்னும் ஒவ்வொருமுறையும் அவளையும் அவளின் அலங்காரத்தையும் இரசிப்பது தாய்! என் மகளுக்கு என்ன வண்ணநிற ஆடை அழகாக இருக்கும் என்று யோசனை செய்பவர்.

தந்தை என்பவர் தாயை விட ஒரு படி மேல். பிள்ளை விரும்பும் அலங்காரப் பொருட்களை வாங்கிக் கொடுப்பவர் அப்பா!

நான் ஆரம்பத்தில் கூறியது போல் பெண்களின் அலங்காரத்தை இரசிப்பவர் இருவருமே.

பெண்ணின் அலங்காரத்தை இரசிப்பவர்கள் ஆண்களுமே. பெண் ஒருத்தி அழகான ஆடை உடுத்தியிருக்கிறாள் என்று கூறுவதும் ஆண்கள். அலங்காரத்தை வர்ணிப்பதும் அவர்களே.

பெண்கள் கூடுதலாகப் மற்றைய பெண்களை இரசிக்க மாட்டார்கள். அவர்களிடம் பொறாமை என்பது உருவாகிவிடும். எல்லா பெண்களும் அப்படி அல்ல. ஆனால் சிலர் பொறாமையில் குறை கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களிடம் இரசிக்கும் தன்மை இருந்தும் இருக்காது. கவலைக்குரிய விடயம்.

திருமணமான பெண்கள் யாரால் இரசிக்கப்பட விரும்புவார்கள். கணவனால்! கணவன் தன்னை மட்டும் அழகானவள் என்று நினைக்கவேண்டும். சிலர் இரசிக்கவே மாட்டார்கள். இரசித்து சிலவற்றைக் கூறிப்பாருங்கள். பெண்களின் மனம் மகிழ்ச்சியடையும்.

அழகு எல்லோராலும் இரசிக்கப் படவேண்டும்.

மனிதனின் உள்ளம் அழகுணர்ச்சியுடையது. ஏன் நாம் அவ்வுள்ளத்தில் பொறாமை வெறுப்பு போன்ற தீய பண்புகளை வைத்திருக்க வேண்டும்? மாற்றிவிடுவோம் இவ்வெண்ணங்களை. யாராக இருந்தால் என்ன நண்பர்களே! இரசிக்கப் பழகிக் கொள்ளுங்கள். இங்கே ஒரு தந்தையின் இரசனையை பதிவு செய்து மகிழ்கின்றேன்.

## தியானம்

ஒவ்வொரு இரவும் தூங்கும் மகளின்
முகம் பார்த்துக் கொண்டிருப்பேன் அது
தவிர தியானம் என்று தனியாக எதுவும்
செய்வதில்லை நான்...!

கவிஞர் ஆன்டன் பெனியின்



# யேர்மனியிலிருந்து வெளிவரும் “மண்” சஞ்சிகையில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுக்குக் கௌரவம்!



அமரர்.எஸ்.எம்.கோபாலரத்தினம்



திரு.லெ.முருகபூபதி

ஜேர்மனியிலிருந்து நீண்ட காலமாக வெளிவரும் ""மண்" சஞ்சிகையின் 186, 187 ஆவது இதழ்களில், ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் (அமரர்) எஸ்.எம். கோபாலரத்தினம் மற்றும் படைப்பிலக்கியவாதி லெ.முருகபூபதி ஆகியோரின் வாழ்வும் பணிகளையும் சித்திரிக்கும் கட்டுரைகளுடன் அவர்களின் படத்தையும் முகப்பில் பதிவுசெய்துள்ளனர்.ஈழத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் போர்க்காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளிலும் அக்கறை காண்பிக்கும் ""மண்"" சஞ்சிகை, போரினால் உடல் ஊனமுற்றவர்கள், நிரந்தரமாக முடமாக்கப்பட்டவர்கள் மற்றும் வாழ்வாதாரம் வேண்டி நிற்பவர்களுக்கு அமைப்பு ரீதியாக உதவி வரும் மண் சஞ்சிகை, காலத்துக்கு காலம் ஈழத்தின் மூத்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டு, அவர்களின் படங்களையும் முகப்பில் பதிவுசெய்து வருகிறது.

புகலிடத்தில் வளரும் தமிழ்க்குழந்தைகளுக்காகவும் நீண்ட காலமாக வாழும் மூத்த தலைமுறையினருக்காகவும் சிறுவர் இலக்கியம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம் உட்பட பலதரப்பட்ட, கலை, இலக்கிய விடயங்களையும் வெளியிட்டுவருகிறது. ஈழத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான மாவட்டங்கள் வறுமைக்கோட்டின் கீழிருப்பதாகவும், அதற்கு ஆதாரமாக சனத்தொகை புள்ளிவிபரத்திலிருந்து தகவல்களையும் சுட்டிக்காண்பித்து, அரசும், நாடாளுமன்றிற்கு தெரிவாகி இருக்கும் தமிழ்த்தலைவர்களும், வடமாகாண சபையும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், நாடுகடந்த தமிழீழ அரசும், புலம்பெயர் சமூக அமைப்புகளும் இதுவிடயத்தில் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் எனவும் ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ள ""மண்"" சஞ்சிகையின்186 ஆவது இதழ் மூத்த ஊடகவியலாளர் (அமரர்) எஸ்.எம்.கோபாலரத்தினம்,நெருக்கடியான காலகட்டத்தில் எவ்வாறு துணிவுடன் இதழியல் பணிகளை தொடர்ந்தார் என்பதை சித்திரிக்கும் கட்டுரையையும் வெளியிட்டுள்ளது. பல்சுவை அம்சங்களுடன் இளம், மூத்த தலைமுறையினருக்கு ஏற்றவாறு வெளிவரும் ""மண்"" சஞ்சிகை Am Windhoevel 18 a- 47249 Duisburg- Germany என்னும் முகவரியிலிருந்து வெளிவருகிறது.




Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€69
புதுப்பித்தல்
£/€49
14 மாதங்கள்
SET TOP BOX INCLUDED
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
SUN
ஆதவன் HD
JAYA TV
Lyca
Lyca
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
காத்தாடி
ORION DIGITAL
திரையரங்கில் வெளியாகும் அதேநாளில் புத்தம் புதிய திரைப்படங்கள்
திரைப்படங்களை £/€1 இல் இருந்து Rental செய்யலாம்
வீரா
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download TV episodes to watch on the go without using data
OK
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி
* Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv



# இருதயம் இதமாக இருக்க A – Z



Dr.கதிர் துரைசிங்கம்

உடல் உறுப்புகளில் அதி முக்கியமான - அபார சக்தி வாய்ந்த - மிக அற்புதமான உறுப்பு எம் இதயம். அன்புக்கு, காதலுக்கு, பாசத்திற்கு, நேசத்திற்கு அடையாளச் சின்னம் இருதயம் என்கிறார்கள்.
இருதயத்தை நேசித்து இதமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வழிமுறைகள்.

Aerobic Exercises: காற்றூக்க உடற்பயிற்சிகள் - நடத்தல், ஓடுதல், சைக்கிள் ஓடுதல், நடனமாடுதல், நீந்துதல். இவற்றுள் எதுவாயினும் ஒன்றைத் தினமும் குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் செய்யவும்.

Anxiety: பதைபதைப்பு - இருதயத் துடிப்பை அதிகரிக்கும், இருதய வலியை ஏற்படுத்தும், இருதய படபடப்பை உண்டாக்கும். சிகிச்சை பெறவும்.

Blood Pressure: இருதயநோயை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்று உயர் இரத்த அழுத்தம். 120/80 என்ற இரத்த அழுத்த அளவை வைத்திருக்க முடிந்தால் சாலச் சிறந்தது. இரத்த அழுத்தம் கூட இருக்கும் பட்சத்தில் வைத்திய ஆலோசனையுடன் மருந்து பாவித்துக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்.

Beta Carotene: நிறங்கள் உள்ள பழங்கள், மரக்கறி வகைகள் முதலியவற்றில் பிட்டா கறோரின் மற்றும் கறோட்ரினோயிட்ஸ் காணப்படுகின்றன. இவற்றை அதிகம் பாவித்தால் மாரடைப்பு வரும் சாத்தியம் குறையும்.

Cholesterol: நமது உடலில் உள்ளதும் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததுமான ஒரு கொழுப்பு கொலஸ்ரரோல் ஆகும். இரத்தத்தில் இருக்கவேண்டிய கொலஸ்ரரோலின் அளவுகள்:-

Total – 200 mg/dl க்குக் கீழ்
LDL – 160 mg/dl க்குக் கீழ்
Triglycerides – 150 mg/dl க்குக் கீழ்
HDL – 45 mg/dl க்கு மேல்

கொலஸ்ரரோல் குறைவாக உள்ள உணவுகளை நாங்கள் உட்கொள்வதன் மூலம் இரத்தத்தில் கொலஸ்ரரோலின் அளவைக் குறைக்கலாம். மேற்கூறிய அளவு மீறும் போது வைத்திய ஆலோசனையுடன் மருந்து எடுத்து தகுந்த அளவில் வைத்திருக்கவும்.

Chest Pain: நெஞ்சுவலி, நெஞ்சு நோவு இவற்றை அசட்டை செய்யாதீர். வைத்திய ஆலோசனை நாடுங்கள்.

Diabetes: தினசரி உடற்பயிற்சி, சமநிலை உணவு, அளவான எடை ஆகியவற்றால் நீரிழிவு வருவதைத் தடுக்க முடியும் என்பது ஒரு கருத்து. இரவு பட்டினிக்குப் பின் காலையில் செய்யப்படும் இரத்த பரிசோதனையில் 6.2 mmol-L அளவிற்கு மேல் குளுக்கோஸ் இரத்தத்தில் காணப்பட்டால் வைத்திய ஆலோசனையுடன் மருந்து பாவித்து குளுக்கோஸ் அளவை சீர நிலைக்குக் கொண்டுவரவும். இருதய நோயை ஏற்படுத்தும் மற்றும் ஒரு முக்கிய காரணி நீரிழிவு.

Depression: மனஅழுத்தம் - இதற்கான காரணிகளை அறிந்து சிகிச்சை பெறவும்.

Eight glasses of water: தினமும் எட்டு கிளாஸ் தண்ணீர் அருந்தவும். 160 இறாத்தல் எடை உடையவர் 80 அவுன்ஸ் நீர் பருக வேண்டும். 10 அவுன்ஸ் நிரம்பிய 8 கிளாஸ்.
Enjoy: விருப்பமான பொழுது போக்கைத் தேர்ந்தெடுத்து அவற்றில் மனதை ஈடுபடச் செய்யவும்.
Fifty: ஐம்பது வயதை எட்டியதும் வைத்திய ஆலோசனையுடன் தினமும் 81.5mg அஸ்பிறின் வில்லை பாவிக்கவும். இரத்தத்தின் தடிப்பைக் குறைத்து இரத்தக் குழாய் அடைக்கும் வாய்ப்பைக் குறைக்கும்.

Fried Foods: எண்ணெயில் பொரித்த உணவுகள் உண்பதைக் குறைக்க முடியுமான அளவு குறைக்கவும்.
Gums: முரசு வருத்தங்களுக்கும், இருதய நோய்க்கும் தொடர்பு அதிகம். தினமும் உணவின் பின் பல்துலக்குவதுடன் ஈறுகளையும் சுத்தம் செய்யவும்.

Genetic Factor: உடற்பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு முதலியன மரபணு நோய்கள் எனக் கருதப்படுகின்றன. இவை குடும்பத்தில் இருப்பின் இருதயநோய் ஏற்படும் சாத்தியம் அதிகம்.
Homocysteine: இது இரத்த குழாய்களின் உட்சுவரைப் பழுதுபடச் செய்து இரத்த உறைவை ஏற்படுத்தும். 400 – 800mcg Folic Acid மாத்திரை தினசரி எடுப்பது இரத்தத்தில் கோமோசிஸ்ரின் அளவைக் குறைக்கும்.
Humour: நகைச்சுவை உரையாடல்களில் பங்கெடுத்து நகைச்சுவையை விரும்பி அனுபவியுங்கள்.
Inflammation: வலியற்ற அழற்சியை அளக்கும் C- reactive protein (CRP) என்ற பரிசோதனை மூலம் இருதய நோய் வரும் சாத்தியத்தை முன் கூட்டியே அறியலாம். வைத்தியரிடம் இது பற்றிப் பேசவும்.
Iron: செங்குருதிக் கலங்களில் உள்ள ஹீமோகுளோபின் (Haemoglobin) இரும்பு சத்திலானது. இறைச்சி, அவரை, பருப்பு, முட்டை, கீரை வகைகள், பச்சை காய்கறிகள் ஆகியவற்றில் இரும்புச்சத்து அதிகம் உண்டு. ஹீமோகுளோபின் அளவு குறையாதிருக்க இவற்றை உணவில் சேர்க்கவும்.
Join: குடும்பத்தாருடன், தினமும் ஒரு வேளையாவது ஒன்றாக இருந்து உணவு அருந்துங்கள். விடுமுறைக்கு குடும்பத்தவர் நண்பர்களுடன் சுற்றுலா சென்று வாருங்கள்.

தொடர்ச்சி 22ம் பக்கம்







எங்கள் மேதின வாழ்த்துக்கள்



21 பக்கத் தொடர்ச்சி



# இருதயம் இதமாக இருக்க A – Z

Jokes: பகிடிகளுக்கு என எழுதப்படும் நூல்களைத் தேடிப் படியுங்கள்.
Know Risk Factor: இருதய நோய்க்கான காரணிகளை அறிந்து அவற்றைத் தவிர்க்கவும்.
Kind Hearted: அன்பு செய்தல், நேசித்தல், இரக்கப்படுதல் போன்ற நற்குணங்களை வளருங்கள்.
Limit Alcohol: சிறிதளவு மதுபானம் தினசரி பாவித்தல் இருதய ஆரோக்கியத்திற்கு உதவுமென ஆய்வு ஒன்று சொல்கிறது. ஆனால் அளவுக்கு மீறிய மது பாவனை இருதயத்தைப் பாதிக்கும்.

Half pint Beer = 1 Unit
One glass of Table Wine = 1 Unit
One small Whisky = 1 Unit
(One unit Contains 1 Centilitre of Alcohol)

இவற்றில் ஒன்றைத் தினசரி ஒரு வேளை அல்லது இருவேளை பாவிப்பது பாதுகாப்பானது.
Laugh: வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.
Medical Check Up: ஆண்டிற்கு ஒரு தடவையாவது குடும்ப வைத்தியரை அணுகி பரிசோதனைகள் மேற்கொள்ளவும். உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சில நோய்கள் பரிசோதனை மூலமே தெரிய வரும்.

Meditate: தினமும் அரை மணி நேரம் அமைதியான இடத்தில் தனியாக அமர்ந்து, அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்தி - கண்களை மூடித் தியானம் செய்யுங்கள்.
Narcotics: போதை வஸ்து பாவனையை நினைக்காதீர்கள். அடிமையாகியவர்கள் வைத்திய உதவி நாடி அதிலிருந்து விடுபடுங்கள்.
நேபயவளைந: எதிர்மறையான போக்கைத் தவிர்த்து நேரிய (Positive) சிந்தனையை வளருங்கள்.
Omega – 3 fats: மக்கரல், சாடின், ருனா ஆகிய மீன்வகைகளை வாரத்தில் இருமுறை உணவில் சேர்க்கவும். சோயாபீன், ஒலிவ் எண்ணெய், பிளாக்ஸ் விதை, உலர் கனி மற்றும் விதைகள் பலவற்றில் Omega – 3 fats உண்டு.

Obesity: உடற் பருமன் - சிறு வயதிலிருந்து இருந்தாலும் சரி, பின்னர் ஏற்பட்டாலும் சரி, உடற் பருமனைக் குறைத்து இருதய நோய் வரும் சாத்தியத்தைக் குறைக்கவும்.

Potassium: பச்சை மரக்கறி வகைகளிலும் பழங்களிலும் முக்கியமாக வாழைப்பழத்தில் பொட்டாசியம் உண்டு. இருதய செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் இக்கனிப்பொருள் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க வல்லது.
Problems: பிரச்சினைகள் எதுவாய் இருந்தாலும் உடனுக்கு உடன் முடிவு காண முயலுங்கள். சேரச் சேர தீர்ப்பது கடினமாகும்: இருதயமும் தாங்காது.
Questions: உங்கள் வைத்தியரிடம் உங்கள் இருதயம் பற்றியும், பரிசோதனைகளின் விபரங்கள் - விளக்கங்கள் பற்றியும் கேள்விகள் கேட்பது உங்கள் உரிமை. பதில் கூறுவது வைத்தியரின் கடமை.

Quality: உங்கள் உணவின் அளவு (Quantity) பெரிதாக இருப்பது முக்கியம் அல்ல. உணவின் தரம் (Quality) சிறந்ததாக இருப்பது இன்றியமையாதது.
Respiration: இது நாங்கள் இடைவிடாது செய்யும் தொழில். பிராணனுக்கு இதன் மூலம் பிராணவாயு கிடைக்கிறது. ஆனால், இடையிடையே சில நிமிடம் மூச்சை ஆழமாக இழுத்து, அடக்கி மெதுவாக வெளிவிடுங்கள். நீங்கள் வெளிவிடும் கரியமில வாயுவுடன் உங்கள் உளைச்சல், பதகளிப்பு, பதற்றம் எல்லாம் வெளியேறி உள்ளம் லேசாகி விடுவதை உணர்வீர்கள்.
Reduse Stress: பதற்றம் - திட்டமிடல், நேர நிர்வாகம், ஒழுங்கான வாழ்க்கைமுறை இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பதற்றத்தைக் குறைக்கவும்.
Salt: "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது பழைய மொழி. "உப்பைக் குறைப்பதே உடலுக்கு உகந்தது" புதிய மொழி. உப்பின் தினசரி பாவனையை 1500 mg க்குக் குறைவாக வைத்திருங்கள்.
Share: "பகிர்ந்து கொள்ளும் ஒரு பிரச்சினை பாதியாகிவிட்ட பிரச்சினையே" என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. மனம் விட்டுப்பேசி - பகிர்ந்துகொள்ள மனைவி, கணவன் அல்லது நண்பர் ஒருவர் கட்டாயம் தேவை.
Trans fats: சிப்ஸ், சிநாக்ஸ், குக்கீஸ் முதலியவற்றிலும், ஆழப் பொரித்த உணவுகளிலும் (Deep Fried Food) இவை காணப்படும். ,வைகளின் பாவனையைத் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும்.
Take Medications: மருந்துகளை வைத்தியர் கூறியபடி ஒழுங்காகப் பாவிக்கவும். பாவனையை நிறுத்துவதாயினும், நீடிப்பதாயினும் அல்லது மருந்துளை மாற்றுவதாயினும் வைத்தியரிடம் ஆலோசனை பெறவும்.
Unsaturated Fats: இவை ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், எள் எண்ணெய், சோயா எண்ணெய் முதலியவற்றில் காணப்படுகின்றன. இவற்றின் பாவனை இரத்தத்தில் இருக்கும் கெட்ட கொழுப்பின் (டுனுடு) அளவைக் குறைக்கும்.
Understand Balanced Diet: நாம் உண்ணும் உணவு - மாப்பொருட்கள், புரதம், கொழுப்பு என மூவகைப்படும். இவை சரியான விகிதத்தில் இருப்பதே சமநிலை உணவு எனப்படும்.

தொடர்ச்சி 24ம் பக்கம்




# திரைக்குப்பின்னால் லீலைகள்!!! வழிகாட்டும் திரைப்படங்கள்?



மாணவிகளை வி.ஐ.பிகளுக்கு விருந்தாக்கிய நிர்மலாதேவி.

ஆங்கிலப்படங்களைப் பாரத்து தமிழ்படம் கொப்பியடிக்க. அதனைப்பார்த்து தமிழ் மக்கள் கொள்ளையடிக்க, பல சீரகேடு களுக்கு திரைப்படங்கள் காரணமாகிறது. தினமும் நாம் திரைப்படம் பாரப்பதால் அக்காட்சிகள் ஏதோ வாழ்வில் ஒரு சாதாரண நிகழ் வுபோல் ஒரு விம்பத்தை தோற்றுவித்துவிட்டது என்பது உண்மையே.

அதனால் கொலை கற்பழிப்பு பாலியல் வன்முறை நிர்வாகச்சீர்கேடு. இவை மிகவும் நுணுக்கமாக பல இடங்களில் வெற்றிகரமாகவும் நடைபெற உதவுகிறது. வாள்வெட்டு கலாச்சரம் யாழ்ப்பாணம் வரை செல்லவும், கொள்ளையடிக்கும்போது கொள்ளையர் வீட்டில் உள்ளவர்களை பயமுறுத்த முதலில் தாக்கும் பாணியும் ( தீரன் படம்) திரைப் படங்கள் விதைத்த விதியாகிவிட்டது. மாணவிகளை உயர் மட்டத்திற்கு விநியோகிப்பது (பைரவா) இப்படி பல.

அன்றும் திரைப்படங்களில் வன்முறை இருந்ததுதான். ஆனால் இன்று அவை பரவலாகும் வீதம் அதிகரித்துவிட்டது. அதற்கு ஊக்கம் கொடுக்கும் விதத்தில் தொழில் நுட்பமும் வளர்ந்துவிட்டது.

இன்று மாணவிகள் பாடசாலை செல்ல மாணவர்களுக்கு அஞ்சவேண்டிய தில்லை.ஆசிரியர்கள் அதிகாரிகள் இவர்களுக்கே அஞ்ச வேண்டியுள்ளது. வேலியே பயிரை மேயும் வேலை சிறப்பாக இப்போ பல துறைகளிலும் நடக்கிறது.
தமிழ் நாட்டில் கடந்தமாதம் கல்லூரி மாணவிகளை தவறாக வழி நடத்திய புகாரின் பேரில் பேராசிரியை நிர்மலா தேவி கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே பல மாணவிகளை விஜபி களுக்கு விருந்தாக்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டு நாட்களாக காவல்துறையினர் நடத்திய விசாரணையில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக அதிகாரிகள் முதல் விவிஜபிக்கள் வரை பலரது பெயர்களை பேராசிரியை தெரிவித்திருப்பதாக கூறப்படுவதால், இந்த பிரச்னை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரி கணிதவியல் துறை உதவி பேராசிரியை நிர்மலாதேவி, இவர், அக்கல்லூரி மாணவிகள் சிலரிடம் பேசிய ஆடியோ, வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது.
அதிக மதிப்பெண் மற்றும் பணம் பெற்று தருவதாகவும், அரசு வேலைக்கு உத்தரவாதம் தருவதாகவும் கூறி பல்கலைக்கழக விவிஜபிக்கள், உயரதிகாரிகளுக்காக, சில அட்ஜஸ்ட்மென்ட் செய்து கொள்ளுமாறு அவர் பேசிய மாணவிகள், பெற்றோர்களிடையே பரபரப்பையும் ஏற்படுத்தியது.

நிர்மலா தேவியின் பேச்சுக்கு உடன்பட மறுத்த மாணவிகள் அளித்த புகாரின்பேரில், கல்லூரி நிர்வாகம் பேராசிரியை நிர்மலா தேவியை 15 நாட்கள் சஸ்பெண்ட் செய்தது. இவரை கைது செய்து நிரந்தர பணிநீக்கம் செய்யக்கோரி கல்லூரி மாணவர்கள் உட்பட பல்வேறு அமைப்பினர் போராட்டம் நடத்தவே, நிர்மலா தேவி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
நிர்மலா தேவி அளித்த வாக்குமூலத்தில் அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரியில் இளங்கலை முடித்தேன். எம்எஸ்சி அருப்புக்கோட்டையில் உள்ள மற்றொரு தனியார் கல்லூரி, எம்பில் அஞ்சல் மூலம் படித்தேன். சென்னை பல்கலைக்கழகத்தில் பி.எச்டி முடித்தேன்.

1995ல் ரயில்வேயில் பணியாற்றிய சரவணபாண்டியுடன் எனக்கு திருமணம் முடிந்தது. கணவருடன் சென்னையில் இருந்தேன். அவர் வெளிநாடு சென்ற பிறகு அருப்புக்கோட்டை கல்லூரியில் வேலைக்கு சேர்ந்தேன். கல்லூரி பணி நிமித்தமாக அருப்புக்கோட்டைக்கு வந்தபோது, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் உதவி பேராசிரியராக உள்ள கருப்பசாமி மற்றும் சிலருடன் பழக்கம் ஏற்பட்டது.

### Phd மாணவர்களுக்கு வழிகாட்டி

பல ஆண்களுடன் பேசி வந்ததால் எனக்கும், கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நான் பி.எச்டி முடித்துள்ளதால் காமராஜர் பல்கலைக்கழக பி.எச்டி மாணவர்களுக்கு கைடாக ஆக்குவதற்கு, உதவி செய்கிறோம் என இருவரும் தெரிவித்தனர். மேலும் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் சிலரது நட்பைத் தொடர்ந்து சென்னையில் உள்ள சிலரின் நட்பு கிடைத்தது.
அவர்கள்தான், கல்லூரி மாணவிகளை பாலியல் தொழிலுக்கு பயன்படுத்தினால் பல காரியங்களை சாதிக்கலாம் என தெரிவித்தனர். இதனடிப்படையில் பேசினேன். கல்லூரி நிர்வாக குழுவில் ஏற்பட்ட மோதலால், வாட்ஸ் அப் ஆடியோவை ரிலீஸ் செய்து விட்டனர் என்று கூறியுள்ளார். கல்லூரி நிர்வாகத்தினர் நிர்மலாவை பலமுறை எச்சரித்தும் அவர் கேட்கவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

### விஜபிக்கள் பெயர். யார் யாருக்கு தொடர்பு!!!

திருச்சுழி காவல்நிலையத்தில் நடைபெற்ற விசாரணையில் காமராஜர் பல்கலைக்கழகத்தின் மிக முக்கிய விவிஜபிக்கள், உயர் அதிகாரிகள், துறைத்தலைவர்களாக உள்ள பேராசிரியர்களின் பெயர்களை நிர்மலா தேவி கூறியதாக தெரிகிறது. 15 மணிநேரத்திற்கும் மேலாக நடந்த விசாரணையில் அவர் பல முக்கிய பிரமுகர்களின் பெயர்களையும் கூறினாராம்.

#### துணைவேந்தர் பதவிக்காகவா துணைபோனார்.?

பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில்தான், பேராசிரியை நிர்மலாதேவி இதுபோன்று மாணவிகளை தூண்டி இழிவான செயல்களை செய்து வந்துள்ளார் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. திரைப்படப் பாணியில் பல மாணவிகளை விருந்தாக்கியதாகவும் அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது





## மூன்றாம் பிறையில் வரவேண்டிய விருது முன்னூறு படங்களில் நடித்தபின் வந்துள்ளது!





'மாம்' படத்தில் நடித்ததற்காக, சிறந்த நடிகைக்காக விருது மறைந்த நடிகை ஸ்ரீதேவிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
65-வது தேசிய திரைப்பட விருதுகள் இன்று டெல்லியில் அறிவிக்கப்பட்டன. அதில், சிறந்த நடிகைக்கான விருது, "மாம்" படத்தில் நடித்ததற்காக மறைந்த நடிகை ஸ்ரீதேவிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீதேவிக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது!

ரவி உத்யவார் இயக்கிய இந்தப் படத்தை, ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரித்துள்ளார். இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாகவும், பயாலஜி டீச்சராகவும் இந்தப் படத்தில் நடித்திருந்தார் ஸ்ரீதேவி.

300 படங்களுக்கு மேல் நடித்துள்ள ஸ்ரீதேவிக்கு கிடைத்துள்ள முதல் தேசிய விருது இது. அதை வாங்க அவர் உயிருடன் இல்லை என்பதுதான் சோகம். அன்று கமலகாசனின் நடிப்பு உயர்வாகப் பேசப்பட்டாலும் மூன்றாம் பிறையில் எந்த அளவு ஸ்ரீதேவியின் நடிப்பு இருந்தது என்பது யாவரும் அறிந்ததே.

22 பக்கத் தொடர்ச்சி

## இருதயம் இதமாக இருக்க A - Z

Vegetables: நிறங்கள் கொண்ட உடன் மரக்கறி வகைகளில் உள்ள இரசாயனப் பொருட்களும், நார்ச்சத்தும் இருதய ஆரோக்கியத்துக்கு உகந்தவை.

Vitamins: சகல விற்ரமின்களை உள்ளடக்கிய ஆரடவளையைஅலை மாத்திரையை தினசரி எடுப்பது உடல் நலத்திற்குக் காப்புறுதி எடுப்பது போலாகும்.

Weight: ஒருவர் தனது உயரத்திற்கு ஏற்ற எடையைக் காட்டிலும் மேலதிகமான எடை உடையவராயின் ஆவன செய்து குறைக்க வேண்டும். உடற்பருமன் ஆட்காட்டி (B.M.I) என்ற கணிப்பின் மூலம் இதைக் கண்டறியலாம்.

Whole Grains: கடலை, பார்லி, அரிசி, வரகு, சாமை, குரக்கன், கோதுமை முதலிய தானியங்களை வேகவைத்து உட்கொள்ளும் போது அவற்றில் உள்ள நார்ச் சத்தும், விற்ரமின்களும் முழுமையாகப் பயன்படும்.

X- Syndrome: வளர்சிதை மாற்றத்தின் (Metabolism) போது நோய் வர ஆதாரமான காரணிகளின் தொகுதி உடலில் காணப்பட்டால் இருதயநோய் வரும் சாத்தியம் அதிகரிக்கும்.

X-ray: ஊடுகதிர் ,யக்க படங்கள் மூலம் இருதய உருவம், இருதய வீக்கம், சுண்ணாம்புப் படிவு (Calcium Desposit) முதலியனவற்றைக் கண்டு அறியலாம்.

You: உன் இருதயத்தை பாதுகாத்துக் கவனிக்க உன்னால் மட்டுமே முடியும். உனை நீ அறி.

Yoga: கிழக்கில் ஆன்மிகரீதியாக ஆரம்பமான உடல் உளப் பயிற்சி, இன்று மேற்குலகில் பிரபலமடைந்து இருதயத்தையும் இதமாக்குகிறது.

Zero Tolerance for Smoking: புகைப் பிடித்தலை அறவே விட்டுவிடுங்கள்.

Zest: மகிழ்வீடுபாடு, உணர்ச்சியார்வம், உற்சாகம் ஆகியன இருதயம் விரும்பும் செயல்கள். நன்றி : தமிழர் தகவல்

விநாயகா ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமேரிக்கா
போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும்
பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த
பண்டித் துர்க்கா பிரசாத்
எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!
குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், விசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள், கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை
CONFIDENTIAL
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

Fly2go.net
24 வருட நம்பிக்கையும் நாணயமும் கொண்ட நிறுவனம்
Flight Online Booking
Book Now, Pay Later
Book your flight online
1. உங்களுக்கு ஏற்ற விமானத்தை தேடவும்
Search flight.
2. உங்களுக்கு ஏற்றதை தெரிவு செய்யவும்
Select your preferred flight.
3. பதிவுக்கான முழுவிபரங்களையும் தரவும்
Complete the booking details.



At the Check-out, please choose the payment option Book Now, Pay Later. Click confirm, we will send you a reservation copy by e-mail.
நீங்கள் தெரிவு செய்து அனுப்பியதும் உங்களுக்கு பதிவு செய்தமைக்கான பிரதி அனுப்பப்படும்.
பணம் கட்டியதும் பயணச்சீட்டு அனுப்பிவைக்கப்படும்
Plan your trip in seconds
உங்கள் பயணங்களை சில விநாடிகளில் திட்டமிடலாம்!
Offnungszeiten.
montags bis Samstag
09:00- 21:00



Travel Air- Ackerstrasse 31
:40233 Düsseldorf
Tel: 0176 47 69 36 43
Tel: 0211 38838699 Tel: 0202 2443104
Info@travelair.de

# வளரும் பயிரை முளையிலே தெரியுமா!

கனகசபேசன் அகிலன்

## அமரர் அகிலன் திருச்செல்வம் அவர்களின் திடீர் இழப்பு அன்று யாழ்ப்பாணத்தை உலுக்கியது!




இது, நான் எழுதவா வேண்டாமா என்று பல தடவைகள் யோசித்துவிட்டு ஒவொரு தடவையும் எழுதாமல் விட்ட விடயம். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் அகிலன் திருச்செல்வம் அவர்களின் திடீர் இழப்பு எப்படி யாழ்ப்பாணத்தை உலுக்கியது என்று 1980 பதுகளின் கடைசிப்பகுதிகளில் (1989ம் ஆண்டு என நினைக்கின்றேன்) யாழ்ப்பாணத்தில் இருந்த மாணவர் களுக்கு தெரியும்.

அமரர் அகிலன் திருச்செல்வம்

நான் அப்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறேன், அன்று காலை மாணவர்கள் எல்லோரும் தவணைப் பரீட்சைக்காக மண்டபத்தில் தமது மேசைகளில் அமர்ந்திருக் கிறார்கள், திடீரென சில மாணவர்கள் மண்டபத்தை விட்டு வெளிநடப்புச் செய்கிறார்கள், என்ன நடந்தது என்று தெரியாமலே பல மாணவர்கள் அவர்களை பின் தொடர்கிறார்கள், இறுதியில் எல்லோருமே வெளியேறி பாடசாலையின் வெளி வாயிலை நோக்கி நகர்கிறார்கள். இப்படி நகரும் போது அதிபர் எங்கள் எல்லோரையும் வழி மறித்து விசாரணையை ஆரம்பிக்கிறார், எமது சக மாணவனின் இழப்புக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எல்லோரும் போகின்றோம் எனவே பரீட்சை எழுத முடியாது என்று அவருக்கு பதில் கூறப்படுகிறது. முன்னே நின்ற சில மாணவர்களை அதிபர் கடிந்து தள்ளுகிறார், குறிப்பாக ஒரு கணிதப்பிரிவு மாணவனை சுட்டிக் காட்டி "இவனை நம்பியா எல்லோரும் போகிறீர்கள், இவன் எந்தப் பாடத்திலும் சித்தியடையப் போவதில்லை, நீங்களும் கெட்டுப்போக போகிறீர்கள் " என்று தன் முன்னே திரளாக நிற்கும் மாணவர்களிடம் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அவர் எந்த மனநிலையில் இருந்திருந்தாலும் ஒரு தனிப்பட்ட மாணவனை மனரீதியாக அப்படி தாக்கிப் பேசியது மிகவும் பிழையான விடயம், இரண்டு அடி அடித்திருந்தால்கூட அது அடுத்த நாள் மறந்திருக்கும், ஆனால் இது ஏனோ இன்னமும்........

அகிலனை போல், அந்தக் காலகட்டத்தில், இளமையில் பறிக்கப்பட்ட சக மாணவர்களின் உயிர்கள் பல. பலவிதமான அனர்த்தங்களின் காரணம் உள்நாடு வெளிநாடு என பலரும் பிரிந்து தேசம் தேசமாகச் சென்றுவிட்டோம். மேலே அதிபரால் கண்டிக்கப்பட்ட மாணவனும் வெளிநாடு சென்று கணிதத்துறையிலிருந்து மருத்துவ துறைக்கு மாறி, கடுமையான முயற்சியின் பின், மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்று தற்போது ஒரு மருத்துவராக (doctor) பணிபுரிகிறான். மிகவும் பெருமைக்குரிய விடயம்.



அவனை காணும்போதெல்லாம் எனக்கு நினைவில் வருவது மேலே கூறிய நிகழ்வுகள் தான். வளரும் பயிரை முளையிலே தெரியும் ஏன்பார்கள், எல்லாப் பயிர்களையும் முளையிலே கண்டுபிடித்து விட முடியாது, சாதகமான சூழ்நிலை அமையாத போது சில வளரக்கூடிய பயிர்களும் முளைவிடுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றன. அகிலன் போன்ற வளர்ந்து வந்துகொண்டிருந்த பயிர்கள் இளமையிலேயே அநியாயமாக நசுக்கப்படுகின்றன.

மற்றும் மேலே கூறிய மாணவன் போன்ற பலர், அதிபர்கள், ஆசிரியர்கள், எமது சமூகம், சில நேரங்களில் சொந்தப் பெற்றோர்கள் என பலராலும் அவமதிக்கப்பட்ட பின்னரும், எல்லாவற்றையும் மீறி உயர்ந்து வளர்ந்து மிளிர்ந்துகொண்டு தான் இருக்கின்றனர். எல்லா பயிரும் எல்லா சூழ்நிலையிலும் வளர்ந்து விடாது ஆனால் எல்லா பயிரும் தனக்கு சந்தர்ப்பமாக சூழ்நிலை அமையும் போது இறுதியில் வளர்ந்தே தீரும்! இந்த சாதகமான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பது, பெற்றோர்கள், பாடசாலைகள், எமது சமூகத்தின் கடமையாகும்.






அனைவருக்கும் மேதின வாழ்த்துக்கள்

# முன்பள்ளிகளின் முக்கியத்துவம்

அனித்தா செல்வராஜா பூஷன்



குழந்தைகளின் வளர்ச்சியில் முன்பள்ளிகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக திகழ்கின்றன. ஓர் குழந்தை முதன்முதலில் தன் வீட்டுச்சூழலை விட்டு புறச்சூழலுக்கு செல்வதென்றால் அது முன்பள்ளியே ஆகும். இங்குதான் பிள்ளைகளுக்கு ஒழுங்கமைக் கப்பட்ட பழக்கவழக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

அதாவது பாடசாலைக் கல்விக்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் உடல் மற்றும் உள விருத்திக்கு தேவையான பல செயற்பாடுகள் விளையாட்டினூடாக பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த முன்பள்ளிகள் மிகவும் தரமான ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கட்டடமும் மற்றும் வெளிச்சூழலும் அமையவேண்டும். அதாவது பிள்ளைகளுக்கு கவர்ச்சியை ஏற்படுத்தக்கூடியவாறும், பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்காதவாறும் இருப்பது இன்றியமையாததாகும். ஆனால் எமது தாயகத்தைப் பொறுத்தவரை இவ்வாறு அனைத்து முன்பள்ளிகளும் ஒரே தரத்துடன் இருக்கின்றதா? என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில், ஒரு பிரதேசசெயலர் பிரிவில் குறைந்தது 60 முன்பள்ளிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவை தேவாலயங்கள், கோயில்கள், சனசமூகநிலையங்கள், ஆகியவற்றின் நிர்வாகத்தினராலும், சில முன்பள்ளிகள் தனியாராலும் செயற்படுத்தப்படுகின்றன. அனைத்து முன்பள்ளிகளும் அரசினால் நடாத்தப்படுவதில்லை. ஒரு பிரதேசசெயலகத்தின் கீழ் ஒன்று அன்றேல் இரண்டு முன்பள்ளிகளே அரசினால் நடாத்தப்படுகின்றது. இவ்வாறு அரசினால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கே ஓய்வூதியத்துடன் கூடிய மாதாந்த சம்பளத்தொகை வழங்கப்படுகின்றது. ஆனால் ஏனைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அவ்வாறு இல்லை. அவர்களுக்கு முன்பள்ளியை நடாத்தும் நிர்வாகம் பெற்றோரிடமிருந்து அறவிடும் மாதாந்த சந்தாவிலிருந்து வழங்குகின்றது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலானோர் சேவையாகவே செய்ய வேண்டியுள்ளது.

உண்மையில் முன்பள்ளிப்பருவத்திற்கே சிறப்பாக பயிற்றப்பட்ட நன்கு கல்விகற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். வளர்ந்த நாடுகளில் பிள்ளைகளின் ஆரம்பக்கல்விக்கு நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். ஆனால் நம்நாட்டில் இன்னமும் அனைத்து முன்பள்ளிகளுக்கும் இவ்வாறு நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லை. நகரப்புறங்களிலுள்ள முன்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களே உரிய கல்வித்தரத்துடன் பணியாற்றுகின்றனர். இந்நிலையில் குழந்தையின் ஆரம்ப வளர்நிலையிலேயே சமத்துவமானதொரு சரியான வழிாட்டல்கள் எமது நாட்டில் இல்லாமை பெரும் குறைபாடாகவே உள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சரியான அங்கீகாரம் வழங்கப்படா மையானதும், பலர் இத்தொழிலை விரும்பாமைக்கு ஓர் காரணமா கின்றது. சிறுவர் அபிவிருத்தி அமைச்சினால் 2005ம் ஆண்டிலிருந்து முன்பள்ளிகளை கண்காணிக்க பட்டதாரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆயினும் அரசினால் அனைத்து முன்பள்ளிகளையும் முழுமையாக பொறுப்பேற்க முடியவில்லை.

வளர்ந்த நாடுகளைப்பொறுத்தவரையில் குடியிருப்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே முன்பள்ளிகளின் எண்ணிக்கையும் அமைகிறது. பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டிட மற்றும் கற்பித்தல் வளங்களும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும் காணப்படும். எம் தாயகத்தைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் இன்னமும் முன்பள்ளிகள் சாதியை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. இதனால் முன்பள்ளிகளின் எண்ணிக்கையும் தேவையற்று அதிகரிக்கின்றது. குறைந்தளவு எண்ணிக்கையான பிள்ளைகளுடன் சில முன்பள்ளிகள் இயங்கி கொண்டிருக்கின்றன. அதாவது ஒரு பகுதியில் இரண்டு, மூன்று முன்பள்ளிகள் இயங்குவதை விட எல்லாவற்றையும் இணைத்து ஒன்றாக நடாத்துமிடத்து, முன்பள்ளியையும் சரியான முறையில் விஸ்தரிக்க முடியும். அத்துடன் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக பல்வேறுபட்ட திட்டங்களையும் குறித்த முன்பள்ளியில் அமுல்படுத்த முடியும். ஆனால் ஒரு சமூகத்திலேயே பல்வேறு நிர்வாகத்தினரால் இரண்டு, மூன்று பிரிவாக இயங்குவதால், உதவித்திட்டங்களும் பிரித்தே வழங்கவேண்டி உள்ளது. அத்துடன் சிலஉதவித்திட்டங்கள் பிள்ளை களின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்படுவதால் இவ்வாறு பிரிவுகளாக இயங்குவதால் ஒருவருக்குமே அவ் உதவித்திட்டங்களும் கிடைக்காமலும் போகின்றது.





# யேர்மனியில் லயம் நுண்கலைக் கழகத்தின் இசை மழை

யேர்மனியில் ஸ்ருட்காட் நகரில் 24.03.2018 சனிக்கிழமை லயம் நுண்கலைக் கழகம் வழங்கிய "இசை மழை 2018" நிகழ்ச்சி சிறப்பாக இடம் பெற்றது.

ஈழதமிழரை தன் இசையால் வசமாக்கிய "ஈழத்து இசைப்புயல் " இசைய மைப்பாளர் திரு இசைப்பிரியன் அவர்களின் நேரடி நெறியாள்கையில் 35க்கு மேமேற்பட்ட மாணவர்கள் இசையமைக்க பிரபலமான தாயகப்பாடகர்கள் பாடிட இசை மழை பொழிந்தது.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் வெற்றிமணி ஆசிரியர் அவர்களும் மதுரக் குரலோன் திரு. எஸ்..கண்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள லயம் நுண்கலைக்கல்லூரி நிறைவான இசைப் பயிற்சி பெற்று முன்னணிக்கு வருவதை உங்கள் இசை உணர்த்துவதாக சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் குறிப்பிட்டார்.

அவர் மாணவர்களைப் பாராட்டியதோடு அந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் ஆசான் இசைப்பிரியன், கழகத்தைக் சிறப்பாகக் கட்டிக்காக்கும் நிறுவனர் திரு நடாராசா சத்தியகிரி அவருடன் இணைந்து பணியாற்றும் கழக உறுப்பினர்கள்.பெற்றோர்களையும் பாராட்டி மகிழ்ந்தார்.

மேலும் குறிப்பாக சிறுவர்கள் மேடையில் பாடும்போது பாடல்வரிகளை காகிதத்திலோ அல்லது கைத் தொலைபேசியிலோ பாரத்துப் பாடாமல், மனனம் பண்ணிப் பாடியது பார்வையாளர்களை வியப்பில் ஆழத்தியது. இன்று பிரபல திரைப்படப் பாடகர்கள் கூட அவர்கள் பாடிய பாடல்களையே வரிக்கு வரி கைத்தொலைபேசியில் பார்த்து பாடுவதையும் நீங்கள் கண்டு இருப்பீர்கள். யேர்மன் நாட்டில் வசிக்கும் நம்மவர்களது வீட்டு மொழி தமிழாக இருப்பதும், நம் சிறார்களின் தமிழ் சிறப்பாக இருப்பதற்கு ஒரு காரணமாக அமைகிறது என உரைத்தார்..

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மற்றும் மதுரக்குரலோன் கண்ணன் அவர்கள் இசைப்பிரியனின் சிறப்பான பணிக்கு பொன்னாடை போற்றி கௌரவித்தார். இசைப்பிரியனது அர்ப்பணிப்பான இசைப்பணி மாணவர்களது இசையில் தெரிகிறது. பல பாடல்கள் சிறுவர்களுக்கு சவாலாக அமைந்தாலும், அப்பாடல்களுக்கு எல்லாம் மிக நுணக்கமாக பின்னணி இசைவழங்கிய மாணவர்களையும், இத்தரணத்தில் பாராட்டுவதாகக் கூறினார்.

ஸ்ருட்காட் நகரில் வசிக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் விழாவில் உணவுச்சாலை அமைத்து அதன் வருமானத்தில் ஒரு பகுதியை தாயக மாணவர்களுக்கு வழங்கி மகிழ்ந்தனர். மகிழ்ச்சியான தரணங்களிலும் தாய் மண்ணை மறவதாத மாணவர்கள் பாராட்டுக்குரியவர்களே. இசை மழை யாவரது உள்ளங்களையும் நனைத்தது.

-சிவப்பிரியன்.யேர்மனி


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450





சிவகாமி மனவறைச் சோடினை



யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350

Yogan Deko

மித்திரன்
திருமண இலவச சேவை



உங்கள் இல்லற வாழ்வின்
உற்ற துணையை

உறுதியாகத் தேடிக்கொள்ள
உதவும் இலவச சேவை நமது.

தொடர்புகளுக்கு:
மித்திரா:

Tel: 02732 57372- Mobil: 0175 4543 416




# பெண் மனசு ஆழம் என 99.99 சதவிகித ஆண்கள் கருதுகிறார்கள்

நிகழ்வு பற்றி நூலாசிரியர் பெருந்தேவி அவர்களின் எண்ண அலைகள் ...........
31.03.2018 மாலை லண்டன், ஈஸ்ட் ஹாமில் வாயாடிக் கவிதைகள், பெண் மனசு ஆழம் என 99.99 சதவிகித ஆண்கள் கருதுகிறார்கள் நூல்களுக்கான அறிமுக மற்றும் விமர்சன நிகழ்வு நடந்தது. ஹரி ராஜலட்சுமியும் மாதவி சிவலீலனும் உரையாற்றினார்கள். நூல்களுக்கான உழைப்பைச் செலுத்தி வாசித்துவிட்டுப் பேசினார்கள் என்பது முக்கியம். நண்பர்கள் கிருஷ்ண ராஜாவும் பௌசரும் ஒருங்கிணைத்த நிகழ்வு. அவர்களும் கூட்டத்துக்கு வந்திருந்த மற்ற நண்பர்களும் கூடவே நானும் உரையாடினோம்.

ஹரி தன் உரையில். ஆசிரியர்--வாசகர் இருவருக்கிடையே கைமாறும் பொருளாக கவிதை எவ்வாறு இருக்கிறது, கவிதை கோரும் வாசக உழைப்பு என்பதை எப்படிப் புரிந்துகொள்ளலாம், எந்த வகையில் முதலீட்டியத்தோடு இயையும் இந்த உழைப்பு பாலினமாதலைக் கோருகிறது அல்லது அதிலிருந்து வாசகரைக் காப்பாற்றுகிறது, பொதுவாக பெண் எழுத்து என்று தரப்படுகிற அடையாளத்துக்கும் இதற்கும் என்ன தொடர்பு, பாலின அடையாளம் தருகிற எடைச்சுமை, பாலினங்களைக் கலைத்து ஆடும் விளையாட்டு, கவிதையில் சொஸ்தப்படுத்தம் தன்மை, கவிதையில் சுயம் சந்தேகத்துக்கு உள்ளாக்கப்பட்டுப் பிறகு முற்றும் வெளியாகி அந்திரத்தில் நிற்றல் (இதை உலோகருசியிலிருந்து பெண் மனசு ஆழம் ... தொகுப்புக்கான நகர்வின் தடமாக ஹரி முன்வைத்தார்) இப்படி பல அவர் உரையில் இடம்பெற்றன. கவிதை எழுதும்போது கவிதையாகிறதா என்பதைத் தவிர எதையும் யோசிப்பதில்லை, ஆனால் வாசகருக்கு அது தருகிற அனுபவம், வாசகர் அதை எதிர்கொள்ளும் விதம் எழுதியவருக்குமே புதிதாக, புத்துணர்ச்சி தருவதாக இருப்பது அபூர்வமாக நடப்பது. அது ஹரியின் வாசிப்பில் எனக்குக் கிடைத்தது. தமிழ்நாட்டில் நேற்று ஹரி முன்வைத்த இலக்கிய விசாரணைகளையெல்லாம் 99.99 சதவிகிதம் யாரும் பேசி நான் பார்த்ததில்லை. என் கவிதைகள் என்றில்லை, கவிதை குறித்து ஹரி நிறைய எழுதவேண்டும். தமிழுக்கு அது சிறப்பு சேர்க்கும்.மாதவியின் உரை வாயாடிக் கவிதைகள் தொகுப்பில் இருக்கும் பல கவிதைகளை நுணுக்கமாக அணுகியது. கவிதைகளின் பாடுபொருள்கள், உள்ளோடும் உணர்வுகள், நகைச்சுவை, எறும்புகள், பூச்சிகள் போன்றவை கவிதைகளில் பெற்றிருக்கும் இடம், அடைப்புக்குறிகள், ஆங்கில வார்த்தைகள் போன்றவற்றின் பயன்பாடு, யதார்த்தத்தை எழுத்தில் கொண்டு வருதல் ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் பேசினார். முக்கியமாக கவிதைகள் அவருக்கு எளிதில் பிடிபட்டதைக் குறிப்பிட்டார். எல்லாவற்றையும்விட அது எனக்கு மகிழ்ச்சியளித்தது. தொடர்ந்த உரையாடலில் ஞானக்கூத்தன், ஆத்மாநாம், பர்ரா போன்றோர் வந்தனர். (நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: ஹரி ராஜலட்சுமி - கே கே ராஜா)

பெருந்தேவி ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் தெற்காசிய மதங்கள், பண்பாட்டு மானுடவியல், இந்திய மருத்துவ வரலாறு, பெண்ணியம் ஆகிய துறைகளூடே ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தற்பொழுது அமெரிக்காவில் சியன்னா கல்லூரியில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிகிறார்.






ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள்




# யேர்மனியில் தேர்க்காலம்

தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**வுப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 05.05.2018 Hünefeld Str 63b, 0202 479 60 17
தேர் 19.05.2018 42282 Wuppertal

**யுலிச் ஸ்ரீ நவசக்திவிநாயகர் ஆலயம்**
கொடி 26.05.2018 Hoch Str 10b 02164 7020 944
தேர் 03.06.2018 41363 Jüchen

**சுட்காட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
கொடி 02.06.2018 Lehmfeld Str 18 0711 67 393 522
தேர் 10.06.2018 70374 Suuttgart.

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 11.06.2018 Siegenbeck Str 04-05 02388 302 223
தேர் 24.06.2018 59071 Hamm.

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
கொடி 16.06.2018 Kiefer Str 24 0231 72 51 51 65
தேர் 24.06.2018 44225 Dortmund.

**பிறாங்போட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 17.06.2018 Adelbert Str 61-63 069 979 45 618
தேர் 30.06.2018 60486 Frankfurt/M

**கிறீவீல்ட் ஸ்ரீ நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
கொடி 23.06.2018 Girmesgath 95 02151 565 00 45
தேர் 01.07.2018 47803 Krefeld.

**கொமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி 23.06.2018. Industrie Str 7 02261 913 133
தேர் 01.07.2018 51643 Gummersbach.

**ஹம் சிறி வெங்கடேஸ்வரப்பெருமாள் திருக்கோவில்**
அலங்கார உற்சவம் 17.05.2018 - தேர் 27.05.2018
Nassauer Str 20- 59065 Hamm-Tel: 02381 42 66 420

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம்**
Sri Varacitti Vinayakar Temple- Gottwald Str 23-45525 Hattinger.
Tell: 023 24 270 61
கொடி 02.06.2018- தேர் 19.06.2018

**ஆடி மாதமும் அதன் பின்னருமான தேர்த் திருவிழா காலம் ஆனி மாத இதழில் வெளிவரும்.**


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க
வெற்றிமணி
0163 199 2333
vettimaniy@hotmail.com




M point Supermarkt
e.mail: mpointsupermarkt@yahoo.de
Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி
Email : shansure7480@yahoo.de
துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER

M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள், மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்



Tel: 02583 30 30 300 0179 48 555 54




வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வெற்றிமணி

0163 199 2333

vettimaniy@hotmail.com









## சட்டத்தரணி கனக மனோகரனின்
## "ஈழத்தமிழர்கள் எமக்காக வாழ்ந்தவர்கள்"
## நூல் வெளியீட்டு விழா







"அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை" ஆதரவில் 2.4.2018 திங்கள் மாலை, Indian YMCA London W1T U.K இல் அமைந்துள்ள மகாத்மா காந்தி மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

Drஅ.பகீதரனின் வரவேற்புரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. யாழ்.பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் மு. நித்தியானந்தன், சட்டத்தரணி செ. சிறீக்கந்தராசா, "நாளிகை" ஆசிரியர் எஸ். மகாலிங்கசிவம் (மாலி) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். Dr சி. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இன் நிகழ்வில், சட்டத்தரணி ரட்ணசிங்கம், பொன் சிவசுப்ர மணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள். சட்டத்தரணி ந,கிருஷ்ணராஜா நூலாசிரியர் கனக மனோகரனுக்கு (கனடா) பொன்னாடை அணிவித்து கௌரவித்து உரையாற்றினார்.

"ஈழத்தமிழர்கள் எமக்காக வாழ்ந்தவர்களான எஸ். ஜே. வி. செல்வ நாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம்,அ.அமிர்தலிங்கம். மங்கையர்க்கரசி.அமிர்தலிங்கம். உடுப்பிட்டி சிவசிதம்பரம், என்.ர.ராஜவரோதயம் பருத்தித்துறை க.துரை ரட்ணம் கு.வன்னியசிங்கம் மட்டுநகர் ராஜதுரை சாவக்சேரி Dr E M V நாகநாதன், கோப்பாய் சி.கதிரவேற்பிள்ளை, சி.மு.இராசமாணிக்கம், உடுவில் ஏ.தர்மலிங்கம். ராசலிங்கம் இன்னும் பலரது கட்டுரைகள் அடங்கிய நூலாக அமைந்திருந்தது.

## நெதர்லாந்து றோர்மொண்ட் நகரசபை தேர்தல்களில்
## வெற்றிபெற்ற முதலாவது
## தமிழ் இளைஞர் அஜித்தன் லோகநாதன்



21- 03- 2018 இல் நடைபெற்ற (நெதர்லாந்து) றோர்மொண்ட் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு.அஜித்தன் லோகநாதன் அவர்கள் சென்ற 29- 03- 2018 வியாழக்கிழமை றோர்மொண்ட் நகர சபை உறுப்பினராக (Municipal Councillor of the Municipality of Roermond) பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் றோர்மொண்ட் நகரசபை தேர்தல்களில் வெற்றிபெற்ற முதலாவது தமிழ் இளைஞர் என்கின்ற பெருமையுடன் எமது தமிழ்ப் பாடசாலையின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு.அஜித்தன் லோகநாதன் அவர்களை இவ்தம் தொண்டு தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம். தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றத்தினரும், றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையும். இவர்களுடன் வெற்றிமணி பத்திரிகையும் வாழ்த்தி மகிழ்கின்றது. இவர் நெதர்லாந்தில் பிறந்தவர். பெற்றோர், தாயகத்தில் உரும்பிராயை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறுகதை

# தூக்கிய திருவடி



சுருதி

ஜெயந்தி காலை ஆறு மணிக்கெல்லாம் வேலைக்குக் கிழம்பிவிடுவாள். வீட்டில் உள்ளவர்களுக்கு 'பாய்' சொல்லிவிட்டு, கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். மெல்லிய இருட்டு. கதவைப் பூட்டிவிட்டு காரில் ஏறப் போனவள் பதறியடித்துக் கொண்டு மீண்டும் வீட்டிற்குள் ஓடிவந்தாள்.
"காரைக் காணவில்லை. ஓடியாங்கோ எல்லாரும்"

சில மாதங்களாக இங்கே விநோதமான கார்த் திருட்டுகள் நடக்கின்றன. நம்பர்பிளேற் திருட்டு, காருக்கு கல்லுகளை அடுக்கிவிட்டு நான்கு ரயர்களையும் கழட்டிக் கொண்டு போதல், பெற்றோலை உறுஞ்சி எடுத்தல் போலப் பல வகை. "பதறாதையப்பா. முதலிலை வேலை செய்யிற இடத்துக்கு இண்டைக்கு வேலைக்கு வரேலாது எண்டு சொல்லும். பிறகு பொலிசுக்கு அடிப்பம்" என்றான் கணவன் குமரேசன்.

பிள்ளைகள் வீட்டில் இடி விழுந்தாலும் எழும்ப மாட்டார்கள். பொலிசுக்குச் சொன்னார்கள். அவர்கள் விபரங்களைக் கேட்டுப் பதிந்து கொண்டார்கள். கிடைத்தால் அறிவிப்போம் என்றார்கள். அவர்களுக்கு இவற்றைவிட நாட்டில் வேறு எக்கச்சகமான சங்கதிகள் இருக்கு.

"ஆரோ தறுதலையள் விளையாட்டுக்குச் செய்திருக்குதுகள். உந்தக் காரைக் கொண்டுபோய் என்ன செய்யப் போறான்கள். பெற்றோல் முடிய எங்கையேன் விட்டிட்டுப் போவான்கள். காரும் புதுசில்லைத்தேனே!" என்றான் குமரேசன்.
"புதுக்கார் இல்லையெண்டாலும் என்ரை ராசியான கார். ஒருநாளும் எனக்குப் பிரச்சினை தந்தது கிடையாது. இஞ்சை வந்து என்ரை உழைப்பிலை வாங்கின முதல் கார்" பெருமிதம் பேசினாள் ஜெயந்தி.
இன்சூரன்ஸ் கொம்பனிக்கு ரெலிபோன் செய்து விபரத்தை அறிவித்தார்கள்.
"இரண்டு கிழமைகள் பொறுத்திருங்கள். அதன் பின்னர்தான் ஏதாவது செய்ய முடியும்" அவர்கள் சொன்னார்கள்.

காரை ஜெயந்தி ஃபுல் இன்சூரன்ஸ் செய்திருந்தாள். ஏறக்குறைய ஒரு இலட்சம் கிலோமீற்றர்கள் ஓடிவிட்டது. கார் கிடைக்காவிட்டால் பத்தாயிரம் டொலர்கள் கிடைக்கும். குமரேசன் கார் கிடைக்கக் கூடாது என விரும்பினான். ஜெயந்தி கார் வேண்டும் என தினமும் கடவுளைப் பிரார்த்தித்தாள்.






பலன் கிட்டவில்லை. இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் பத்தாயிரம் டொலர்கள் கிடைத்தன. அத்துடன் இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் அந்தக் காரின் கணக்கை மூடிவிட்டார்கள்.

கணக்கை மூடி மூன்றாம் நாள், கன்பரா நகரத்தில் கார் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தகவல் சொன்னார்கள்.

அது அவர்களுக்கு புதிய தலையிடியைக் கொடுத்தது. இனி என்ன செய்யலாம்? மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டார்கள்.

"காரின் பெறுமதி உண்மையிலை இப்ப பத்தாயிரம் வராதப்பா! உனக்கு லக். இத்தோடை உந்தக் காரைக் கை கழுவி விடு ஜெயந்தி" என்றான் குமரேசன்.

"முடியாது. எனக்கு அந்தக் கார் தான் வேண்டும்" பிடிவாதம் கொண்டாள் ஜெயந்தி.

இன்சூரன்ஸ் கொம்பனியுடன் தொடர்பு கொண்டபோது, "கணக்கை மூடியாகிவிட்டது இனி ஒன்றும் செய்யமுடியாது. அக்ஷிடென்ற் கார்கள் ஏலம் விடப்படும் கொம்பனிக்கு நாங்கள் உங்கள் காரையும் அனுப்புவோம். விருப்பமானால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்று சொல்லி அவர்களின் முகவரி தொலைபேசி எண்களைக் கொடுத்தார்கள்.

ஏலம் விடும் கொம்பனியுடன் தொடர்பு கொண்டாள் ஜெயந்தி.

"எனக்கு என்னுடைய கார் வேண்டும். அது என் ராசியான கார்
எவ்வளவு என்றாலும் பரவாயில்லை" ஜெயந்தி சொல்ல அவர்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது. "அப்படி ஒன்றும் செய்யமுடியாது. உங்களுடைய காரும் அக்ஷிடென்ற் பட்ட கார்களுடன் ஒன்றாக ஏலத்திற்கு வரும். ஏலம் போட்டு எடுங்கள். பொதுவாக ஆயிரம் இரண்டாயிரம் டொலர்களுக்குள்தான் வரும்."

ஆயிரம் இரண்டாயிரம் டொலர்களுக்குள் தான் வரும் என்ற செய்தி ஜெயந்திக்குப் பாலை வார்த்தது. ஏற்கனவே பத்தாயிரம் பெற்றுவிட்டாள். உஷாரானாள். சொந்தக் காரையே ஏலத்தில் எடுக்க வேண்டிய தலைவிதி.

குமரேசன் எது சொன்னாலும் பிரச்சனை தலைவிரித்தாடும் எனப் பயந்து ஜெயந்தியின் செயல்கள் எல்லாத்துக்கும் ஆமாப் போட்டான்.

ஏலம் நடைபெறும் நாள் வந்தது. காரை எப்படியாயினும் வாங்கியே ஆக வேண்டும் என்ற தோரணையில் குமரேசனும் ஜெயந்தியும் புகையிரதம் மூலம் வந்திருந்தார்கள். ஏலத்தில் விடப்படும் வாகனங்களைப் பார்வையிட ஒரு மணி நேரம் ஒதுக்கியிருந்தார்கள். ஜெயந்தியின் காரின் முன்புறம் சிறிது சேதமடைந்திருந்தது.

எத்தனையாவது காராக இவர்கள் கார் வரும் என்பது தெரியாததால் ஆரம்பம் முதலே காத்திருந்தார்கள். கார்கள் ஒவ்வொன்றாக ஏலத்திற்கு வரத் தொடங்கின. ஒவ்வொரு வாகனமும் குற்றியிரும் குலையுயிருமாக இன்னொரு வாகனத்தில் ஏறி வந்து கொண்டிருந்தன.

வாகனங்களைப் பார்க்கப் பார்க்க பகீரென்று இருந்தது ஜெயந்திக்கு. குமரேசன் கண்ணை மூடி ஒண்றரைக் கண்ணால் பார்த்தான். எந்தக் காரும் 1500 டொலர்களுக்கு மேல் விலை போகவில்லை.

ஜெயந்தியின் கார் வந்ததும், "ஃபைவ் ஹன்றட் டொலர்ஸ்" என்று கத்தியபடியே கையைத் தூக்கினாள் ஜெயந்தி. ஏலம் தொடங்கி இரண்டு மணித்தியாலங்கள் அப்படியொரு பெண்மணி அங்கே நிற்கின்றாள் என்பதை அறிந்திராத எல்லோரும் அவளை வினோதமாகப் பார்த்தார்கள்.

அதன்பின்னர் தூக்கிய கையைக் கீழ் இறக்கவில்லை ஜெயந்தி. ஒரு சீனாக்காரன் 2000 டொலர் வரையும் ஏற்றிவிட்டு நாக்கைத் தொங்கப் போட்டான். ஜெயந்திக்கும் குமரேசனுக்கும் ஒரே சந்தோசம்.

தொடர்ச்சி 31 ம் பக்கம்





# சிம்புவுக்கு டயலாக் பேப்பர் காட்டும் பையனாக வேலை செய்த சிவகார்த்திகேயன்



சிம்புவுடன் சேர்ந்து பணியாற்றியது குறித்து நடிகர் சிவகார்த்திகேயன் தெரிவித்துள்ளார். சின்னத்திரையில் இருந்து பெரிய திரைக்கு வந்து அசுர வளர்ச்சி அடைந்துள்ளார் சிவகார்த்தி கேயன். நடிப்பது தவிர படங்களை தயாரிக்கவும் செய்கிறார். பெரிய திரைக்கு வர விரும்பும் சின்னத்திரை பிரபலங்கள் சிவகார்த்திகேயனை ரோல் மாடலாக வைத்துள்ளனர்.

## நாளை எதுவும் நடக்கலாம்

நெல்சன் இயக்கத்தில் சிம்பு நடித்த வேட்டை மன்னன் படத்தில் சிவகார்த்திகேயனும் நடித்துள்ளார். சிவகார்த்திகேயன் நடிக்க வந்த புதிதில் அவருக்கு வேட்டை மன்னன் பட வாய்ப்பு கிடைத்தது. வேட்டை மன்னன் படத்தில் சிவகார்த்திகேயன் துணை இயக்குனராக பணியாற்றியுள்ளார். மேலும் அந்த படத்தின் சில காட்சிகளிலும் நடித்துள்ளார். ஒவ்வொரு காட்சிக்கும் முன்பு சிம்பு பேச வேண்டிய வசனங்களை அவரிடம் காண்பிக்கும் வேலையை செய்துள்ளார் சிவகார்த்திகேயன். பல காரணங்களால் வேட்டை மன்னன் படம் கைவிடப்பட்டது. தன் படம் வெளியாகும்போது எல்லாம் சிம்பு தனக்கு போன் செய்து தனது கருத்தை தெரிவிப்பார் என்று சிவகார்த்திகேயன் கூறியுள்ளார்.




# நயன்தாரா திருமணத்திற்கு தயாரா?



அடுத்தடுத்து மலையாள படங்களில் ஒப்பந்தமாகி வருகிறார் நயன்தாரா. கோலிவுட்டின் முன்னணி நடிகையாக இருக்கும் நயன்தாரா தனது காதலரான விக்னேஷ் சிவனை இந்த ஆண்டே திருமணம் செய்யக்கூடும் என்று கூறப்படுகிறது.

திருமணத்திற்கு பிறகும் தொடர்ந்து படங்களில் நடிக்கும் எண்ணத்தில் உள்ளாராம் நயன்தாரா. ஓல்லிக்குச்சியாக இருக்கும் நயன்தாரா வயதானவர் போன்று தெரிகிறார் என்ற விமர்சனம் எழுந்துள்ளது. இந்நிலையில் திருமணம் முடிந்தால் அக்கா, ஆன்ட்டியாக்கிவிடுவார்கள் என்று பயப்படுகிறாராம்.

மலையாள திரையுலகில் திருமணமாகி குழந்தைகளுக்கு தாயான பிறகும் தொடர்ந்து ஹீரோயினாக நடிக்க முடியும். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு நடிகை மஞ்சு வாரியர் தான்.

தன் சொந்த மாநிலமான கேரளா பக்கம் கவனத்தை திருப்பியுள்ளார் நயன்தாரா. மலையாள திரையுலகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கியுள்ளார். அடுத்தடுத்து மலையாள படங்களில் ஒப்பந்தமாகி வருகிறார். இந்த ஆண்டே திருமணம் என்பதால் இந்த முடிவு எடுத்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.



30 ம் பக்கத் தொடர்ச்சி....

**தூக்கிய திருவடி ---- சிறுகதை**

"டேவிட்... நாலாயிரம் டொலர்கள். டேவிட் நாலாயிரம் டொலர்கள்" எனச் சத்தமிட்டான் ஏலம் கூறுபவன். ஜெயந்தி, யார் அந்த டேவிட் என நாலாபுறமும் தேடினாள். அப்படி ஒருவரையும் அங்கு காணவில்லை.

எல்லாரும் அங்கே ஒரு மூலையில், இதுவரையும் தேடுவாரற்றுக் கிடந்த கொம்பியூட்டர் ஒன்றின் ஸ்கிரீனைப் பார்த்தபடி இருந்தார்கள்.

அப்போதுதான் இன்ரனெற் மூலமும் ஏலம் கேட்கலாம் என்பதை ஜெயந்தியும் குமரேசனும் அறிந்து கொண்டார்கள். ஜெயந்தி விடவில்லை. அவனுடன் போட்டி போட்டாள். எல்லோரும் ஜெயந்தியைப் பார்த்தபடி இருந்தார்கள். அந்தப் பார்வை அவளுக்கு நட்டுக் கழன்றுவிட்டது என்பதான பார்வை. கடைசியில் ஆறாயிரம் டொலர்கள் வரை ஏற்றிவிட்டு டேவிட் ஒழிந்து கொண்டான். ஜெயந்தி ஆறாயிரத்து நூறு டொலர்கள் கொடுத்து காரைப் பெற்றுக் கொண்டாள்.

"நீர் அண்டைக்கு ஒக்சன் நடத்துறவனோடை கதைக்கேக்கை, எவ்வளவு எண்டாலும் பரவாயில்லை. எனக்குக் கார்தான் வேணும் எண்டு சொன்னீர். அதுதான் அவன் விளையாடி இருக்கிறான். தன்ரை நண்பர் ஒருத்தனைக் கொண்டு இன்ரனெற் மூலம் ஏலத்தைக் கூட்டிவிச்சிருக்கிறான்."

"அவன் கூட்டட்டும். எனக்குத்தானே தெரியும் என்ரை காரின்ரை பெறுமதி. இன்சூரன்ஸ்காரன் எவ்வளவு தந்தவன் எண்டதை மறந்திட்டியளே! ஒருநாளும் என்ரை கார் பிரச்சினை தந்ததில்லை. தெரியும் தானே!"

"தூக்கிய திருவடி என்று கேள்விப்பட்டிருக்கிறன். இண்டைக்குத்தான் தூக்கிய திருக்கையைப் பார்த்திருக்கிறன்" என்று நக்கலடித்தான் குமரேசன்.





உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS
தூரித பண மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
சரவணபவன்
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Rabeena
இலங்கையில் தயாரிக்கப்பட்ட
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்
Kipper Str.3 44147 Dortmund Germany